தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

ற செந்தமிழீர் சாகா விடுதலைக்கே
கின்ற தெண்ணிப் புறப்படுங்கள் — மாகுன்றத்
டும் மணிமார்பும் தூங்காத நல்லுணர்வும்
ம் துணையாம் நமக்கு!



காசு

கவிடி: ... க. கும்பம் (மாசி) ...

-நமக்கு வந்த மடல்கள்-

அன்புடையீர்!

O சுறவம் இதழில் 'நமக்கு வந்த மடல்கள்' பகுதியில், "Oxford-University-யை எருதந்துறைப் பல்கலைக் கழகம்" என்று மொழி பெயர்ப்பது மொழிவெறியைக் காட்டுகிறது என்று ஓர் அன்பர் எழுதியிருந்தார். திரு. துரை-மாணிக்கம் மொழி வெறியரென்றால் இதற்கு முன்னரே வெளிநாட்டுத் தமிழன்பர் ஒருவர், "கோதீர்த்தத் துறை சர்வகலாசாலை" என்று மொழி பெயர்த்திருக்கிறாரே! இதை என்னவென்று சொல்லுவது? அவர் வேறுயாரும் அல்லர்; போப் பாதிரியார் தாம்! (G. U. Pope).

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத ஒருவர் இவ்வாறு மொழி பெயர்த்திருக்கும்போது, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் மொழி பெயர்ப்பது எங்ஙனம் மொழிவெறி யாகும்?

-மணிவேலன், இ.க.ஆ.ப. தலைவர், தமிழ்வளர்ச்சிமன்றம், அரூர்.

O தாங்கள் தென்மொழி (மார்கழி, தை) இதழில் வரைந்திருந்த ஆசிரியவுரை மிகவும் சிறப்பான முறையில் தமிழக அரசுக்கு வழி காட்டியாகவும், நடுவணரசுக்கும் இந்தி வெறியர்களுக்கும் எச்சரிக்கை யாகவும் இருந்தது. இதைத் தமிழக அமைச்சர்கள் படித்து ஆய்ந் துணர்ந்து தாங்கள் தமிழ்காக்க-வளர்க்கக்காட்டிடும் வழியினைப் பின் பற்றிச் செல்லவேண்டும், இதனால் அரசுக்கும் பயன்; தமிழக மக்களுக் கும் பயன் விளையும்! தமிழைக் காப்பவர்கள் தெரிந்தோ தெரியாமலோ தமிழுக்கு எதிரிகளாக மாறிவிடக்கூடாது. ஆசிரியவுரை சிறப்பாக அமைந்திருந்தது. தங்கள் துணிவுமிக்க தமிழ்ப்பணி யார் தடுத்தா லும், இந்தப் பார்தடுத்தாலும் தமிழ்த்தாயின் துணையுடன் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கட்டும்! என் மனமார்ந்த வாழ்த்து!

அன்புள்ள, ம.கா. எழிற்செல்வன், எதுமலை.

O வணக்கத்திற்குரிய வண்டமிழ் வா ழ்வ! கடந்த ஓராண்டிற்குட் பட்ட காலத்திற்றான் "தென்மொழி"யின் தொடர்புபெறும் பேறு பெற்றேன். உம்முடைய தமிழ்ப்பணிகாண உளம் உவகை வாரிதியில் மூழ்கி மூழ்கி எழுகின்றது. பாழ்வெளி நோக்கிச் செல்லும் தமிழ்க் குமு காயத்திற்கு, வாழ்வில் மேல் வழிகாட்ட ஆர்த்தெழும் அடலேறே! உம் பயன்மிக்க பயணத்தில் தோள்வலி சேர்க்கும் தோழனாய்த்தொடர உம்முடைய தாள்தொட்டு வணங்கி உறுதியளிக்கிறேன். ஆயின் அய்ய! தமிழ், தமிழ்க் குமுகாய விழிப்பு இரண்டன்பால் மட்டுமே. ஈடும் எடுப்பு மற்ற தங்கள் திண்ணிய திருப்பணி இருக்கட்டும். அரசி யல் வேண்டா! அண்ணா ஓர் அமைதி வாரிதி. எண்ணியன எண்ணிய படி எய்தும் திண்ணியர். அவர் ஆற்றலில் ஐயுறவு கொள்ளவேண்டா! நும் கொள்கையே அவர் கொள்கையும். ஆனால் நும் வழிவேறு; அவர் வழிவேறு. உம்முடைய விரைவு இற்றை நாளில் ஏற்றற்கியலா ஒன்று; வீணில் அண்ணாவைச் சாடல் வேண்டா. நும் நெஞ்சம் மகிழ்வுற வினைகள் முடித்துக் காட்டுவார். கால வெளி கூடும். பொறுத்தருள்க! எம்முடைய உளக்கிடக்கை இது. எடுத்துரைத்தோம். ஏற்புடைத் தாயின் ஏற்க! இல்லெனில் ஏற்றவழிச் செல்க! நும் தொண்டும் வாழ்வும் சிறக்க எம் வாழ்த்துகள்! –வையைநாடன், நிலவை, மதுரைமாவட்டம்.

தனித்தமிழ் உருவே! தி. பி. ... நளி இதழில் "தென் காலந்தாழ்ந்து வரக் காரணம் என்ன?" என்ற தலைப்பின்கீழ்

(தொடர்ச்சி 3ஆம் அட்டைப்பக்கம்)

தென்மொழி

இலக்கிய இதழ்

“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே.

சுவடி-6::ஓலை-1

கும்பம் (மாசி) தி. பி. ௧௯௯௯ (1968-மார்ச்சு)

பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு.

1966-ஏப்ரலில், மலைநாட்டில் நடந்த முதல் உலகத் தமிழ்ஆராய்ச்சிமாநாட்டையொட்டி, இவ்வாண்டு சனவரியில் சென்னையில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு உலகத் தமிழர்களையும், மொழியறிஞர்களையும், அரசியல் தலைவர்களையும் தன்பக்கம் ஓரளவு ஈர்த்தது என்று சொல்லலாம். மாநாடு வெறும் பொதுமக்களின்-தமிழ் ஆர்வலர்களின் கூட்டமாக மட்டும் அமையாமல், அங்குக் கூடிய தமிழ் அறிஞர்களின் ஆராய்ச்சிக் கருத்தரங்கைத் தனியே கொண்டதாகவும் அமைந்

தது பாராட்டத்தக்கது. இப்படியொரு மாநாடும் கருத்தரங்கும் நடை பெறப் போவதாக அறிவிப்பு வந்ததும், இவ்வளவு பெரிய மாநாட்டை எப்படிக் கூட்டுவது, சிறப்புற நடத்திக் காட்டுவது என்று அரசினர் கவலைப்பட்டது போலவே, இதனை எப்படிப் பயன்படுத்திக்கொண்டு விளம்பரம் பெறுவது, எப்படியெப்படியெல்லாம் இதனுள் ஈடுபட்டுப் பணத்தைக் கரப்பது என்றவாறு போலியர் சிலரும் பொறுக்குநர் சில ரும் கவலைப்பட்டதையும் நாம் கண்டோம். ஆனால் அதே பொழுதில், தமிழுக்கு வந்து வாய்க்கும் மேம்பாட்டுக்கு மனம் பொறுத ஆரியப் பார்ப்பனர் சிலரும் உள்முகமாக இத்தகைய மாநாட்டை எவ்வாறு வெற்றிபெறாமல் செய்வது? அல்லது சிறப்பைக் குறைப்பது? அல் லது அந்தச் சிறப்பில் தாமும் எப்படி ஒட்டிக்கொள்வது? அல்லது அதே பல்லக்கில் சமற்கிருதத்தையும ஏறவைத்துத் தூக்கச் செய்வது எப்படி? என்றெல்லாம் எண்ணி மூளை குழப்பிக்கொண்டிருந்தனர். 'தினமணி' போன்ற ஆரியப் பழம் பெருச்சாளிகளோ தமிழ் மாநாட்டை தமிழ் மாநாடு என்று சொல்லவும் மனம் வராது, 'தமிழ் உற்சவம்' என்றே எழுதித் தாம் தமிழுடன் சமசுக்கிருதத்தையும் கலந்து விட்ட தாக எண்ணி உச்சி மயிரையும் உடம்பு நூலையும் ஒருங்கே உருவிக் களித்தன. பேராயக் கட்சியினரோ தாம் பார்த்த பெண்ணுக்குக் கொட்டு முழக்கோடு தாலிகட்ட வந்த தி. மு. க. மணப்பிள்ளையைப் பார்த்துப்பார்த்து உளம புழுங்கி, உடலம் வெயர்த்து நின்றனர். எங் காவது ஒரு 'சதக்' செய்தியும் 'பரக்' நிகழ்ச்சியும் நடக்காதா என்று 'சுடச்சுட' செய்திக்கு மோப்பம் பிடித்தலையும் ஆதித்தன் குழுவினர் இந்தச் சூடான தமிழ் மாநாட்டுச் சட்டியிலேயே புதுவரும்படியையும் வறுத்தெடுத்துக் கொள்ளலாம் என்று அங்காந்து திரிந்தனர். இவ் வாறு பரபரப்புடன் பலருடைய ஈட்டத்திற்கும், நாட்டத்திற்கும், நோட்டத்திற்கும், ஆட்டத்திற்கும் இலக்கான மாநாடு ஏறத்தாழப் பத்திலக்கம் மக்களின் கூட்டத்தோடும் கொட்டு முழக்கோடும், பதி னொரு படிமங்களின் திறப்பு விழாவோடும் தொடங்கிச் சனவரி 10ஆம் நாள்வரை சென்னை நகரத்தையே ஒரு கலக்குக் கலககியது. எப் படியோ மாநாடு நடந்து முடிவுபெறுமவரை ஆடாத கைகளெல் லாம் ஆடின; ஓடாத கால்களெல்லாம ஓடின; கூடாத தலைகளெல்லாம கூடின; பாடாத வாய்களெல்லாம பாடின. முடிவில் வழக்கப்படி வரவு செலவுச் சண்டை; கணக்குப் பட்டியல்; கைகழுவல்; கண் துடைப்பு; விழுங்கல்; ஏப்பம் விடல்; செரித்தல்; இவற்றைக் கண்களால மட்டும் கண்டவர் தம் வயிற்றெரிச்சல்; நாக்கெரிச்சல் முதலியன இனிதே

நடந்தேறின. நாமோ தமிழக அரசால், தமிழ்நாட்டில் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் தமிழுக்கு வந்த வரவையும் செலவையும் வழக்கம் போல் கணக்குப் பார்த்து ஊதிய இழப்புக் காட்டுவோம்.

உலகில் பெரும்பாலும் தமிழர்கள் இலங்கை, பர்மா, சிங்கை, மலேயா, பிசி, தாய்லாந்து, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் பரவலாகக் குடியேறி வாழ்கின்றனர். இவர்களையெல்லாம் ஓரளவேனும் ஒருங்கே கூட்டுவதென்பது கடலைக்கடைந்து வெண்ணெய் திரட்டும் ஆகாச் செயலாகும். ஆனால் இவர்கள் பலநாட்டாரொடும், பண்பாட்டொடும் முருகக் கலந்து விட்டனரேனும், மொழியெனும் பெருத்த ஒரு வல்லுணர்வின் பொருட்டு இவர்களைக் கூட்டுதல் அவ்வளவு கடினமன்று என்பதையே தமிழளவில் நடந்த உலக மாநாடுகள் இரண்டும் வலியுறுத்திக் காட்டின. மாநாட்டு நாட்களன்று இவர்கள் எல்லாரும் ஒருமுகமாக ஒருங்கே கூடிற்றிலரேனும், ஒரு நெஞ்சினராகச் சென்னையில் நடக்கும் நிகழ்ச்சிகளிலேயே கருத்துச் செலுத்தியிருப்பர் என்பது ஒருபொருளுவமாக நமக்குக் கிடைத்த உண்மை. இத்தகைய சிறப்பு மிக்க மாநாட்டினைத் தமிழ் பற்றியோ, தமிழரின் தனிநலம் பற்றியோ அக்கறை காட்டாத பேராயக்கட்சியன்றித் தமிழுக்குப் பெருத்த அளவில் என்றில்லாமற் போயினும் ஓரளவேனும் நலஞ்செய்யக் காத்திருக்கும் தி. மு. கழகம் கூட்டியது நாம் எண்ணி மகிழத்தக்கதுதான். ஆனால் வயிற்றைப் பொறுத்த செய்தியாக இருப்பின் பட்டினிக்குப் பாதிவயிறு நிறைதல் மேலென்றுகூடக் கருதலாம். உணர்வைப் பற்றிய செய்தியோ அப்படியன்று; நோய்க்கு மருத்துவம் போன்றதும், காதலுக்குக் கூடல் போன்றதுமான செய்தி. அரை மருத்துவம் நோயையும், அரைப்புணர்ச்சி காதல் வேட்கையையும் எவ்வாறு தணித்தல் இயலாதோ-மாறுக எப்படி நோயாளியையும், வேட்கையுற்றவரையும் வெறுப்படையச் செய்புமோ அப்படிப் போன்றது இவ்வுணர்வு. ஆதலால்தான் நாம் மொழி, பண்பாடு போன்ற குமுகாய உணர்வுகளில் முழுப்படையலுக்கு ஏங்கி நிற்பது.

அரிதின் முயன்று, பெரிதின் பொருள் தொகுத்து உரியன செய்யத் தவறினுமானால் பயன் சிறிதாயினும், வெறிதாயினும் ஒன்றே என்பதை இத்துறைகளில் ஈடுபட்டிருப்போர் ஆய்ந்து உணர்தல் வேண்டும். இம் மாநாட்டைத் தி. மு. கழகம் நடத்தியிராமல் போனால்

பேராயக்கட்சி, அதுவும் பக்தவத்சலம் போன்ற பார்ப்பன அடிமைகள் நடத்தியிருக்குமானால் மாநாட்டின் விளைவு முன்கூட்டியே கணிக்கப் பெற்றுச் சென்ற தென்மொழியிலேயே இதுபற்றி முடிவு கூறியிருக்க முடியும். அவ்வாறின்றித் தமிழ்–தமிழர் நலம் நாடும் ஒரு கட்சியாட்சி இம் மாநாட்டை எடுத்து நடத்தியதால்தான் நாமும் நாவடக்கத்தோடும், மன அடக்கத்தோடும் இருக்க வேண்டியதாயிற்று.

தி. மு. க. வினர்க்கு இனிப் புதியதாகத் தமிழுணர்வு ஊட்ட எவரும் முனைய வேண்டியதில்லை. புதியதாக வினையாண்மையைக் கற்றுக்கொடுக்கவும் வேண்டியதில்லை. அவர்களுக்கு இருக்கும் குறையெல்லாம் செய்வன திருந்தச் செய்யாமைதான்; போலித்தனங்களை உண்மை என்று மயங்குவதுதான்; தங்கள் முதுகுகளில் தாங்களே தட்டிக் கொடுத்துக்கொள்ளும் தற்பெருமைதான். அவர்கள் அவ்வாறு நினையாமல்–நடவாமல் எந்தச் செயல்களைத் தொடங்கினாலும் அவை இனிதே முடியும் என்பதை வருத்தத்துடனும், ஆனால் அழுத்தத்துடனும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இப்படிப்பட்ட நிலையை-செய்தக்க செய்யாமையானும் கெடும் எனறவகையை-இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆராய்ந்து அதனை அவன்கண் விட நினைக்கும் தன்மையை அவர்கள் பெற்றிராமல் போனமையால்தான் அவர்தம் கால்கள் அவர்களை அறியாமல் சறுக்குகின்றன; அவர்களின் கைகள் அவர்களை அறியாமல் சோர்வடைகின்றன; அவர்களின் கண்கள் அவர்களையே ஏமாற்றுகின்றன. இந்தச் சறுக்கலும், சோர்வும், ஏமாற்றமுமே இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளிலும் இறுதியாக மீதப்பெற்றன என்றால் குறைவுடையதாகி விடாது. குழந்தைபெற விரும்புவதுவேறு; குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்மை வேறு. இந்த இருவேறு நிலைகளையும் அவர்கள் புரிந்து கொள்வார்களானால் நாம் கூறிய அவர்களின் இந்த உண்மையையும் அவர்கள் புரிந்து கொள்வது எளிது.

மாநாட்டில் இரண்டு மேடைகள்–கருத்தரங்கு–நிகழ்ச்சியரங்கு–என்று பாகுபாடு செய்தது நல்லதுதான். ஆனால் கருத்துகளும் நிகழ்ச்சிகளும் ஒழுங்குபடுத்தப் பெற்றிருக்க வேண்டாவா? முதன் முதலாக மாநாட்டிற்கென்று அழைப்புகளையும் பிற விளக்க விதழ்களையும் அச்சிட்ட வகையிலும் பிற விளம்பரங்களை அடித்துப் பரப்பிய வகையிலும் இத்தனைப் பணத்தை (ஏறத்தாழ ஓரிலக்க உருபாவை)ப் பாழடித்

திருக்க வேண்டியதில்லை. இப்பணத்திற்கு மொழிநூற் பேரறிஞரும், இத் தமிழகத்திற்கே அரிதின் கிடைத்த அறிவுலக வேந்துமான தேவநேயப் பாவாணர் அவர்கள் எழுத முடிந்து, வெளியிட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் ஏறத்தாழ முப்பது நூற்களையும் (ஏறத்தாழ மூவாயிர மூவாயிரம் படிகள்) அச்சிட்டு உலக முழுமையும் உள்ள பல்கலைக் கழகங்களுக்கும், தமிழ் மொழியைப்பற்றித் தப்பும் தவறுமாகக் கருத்தறிவிக்கும் மொழியாராய்ச்சியாளர்களுக்கும் இலவசமாக அனுப்பியிருக்கலாம். இப்படித் தி. மு. க. அரசு செய்திருக்குமேயானால் உலகம் உள்ளளவும்—தமிழ் உள்ளளவும் அவர்களின் அருஞ் செயலை எத்தனைப் பேராயக் கட்சியர் வந்தாலும் மறைத்துவிடவோ குறைத்துவிடவோ முடியாது என்பது ஒருதலை. அழைப்பிதழ்கள் நடவடிக்கை நிரல்கள் எல்லாமும் பனிவெண்மை (SNOW WHITE) அட்டைகளில்தான் அச்சிடவேண்டுமோ? இத்தகைய நிகழ்ச்சி முறைகளில் மேனாட்டாரைப் பின்பற்றுதல் குரங்குசளும் தொப்பித் தலையனும் கதையில் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்க.

இப்படிப் பாவாணரின் நூல் வெளியீடு என்ன இன்றியமையாமை என்று சிலர் கருதலாம். அவர்களுக்குப் பின்வரும் கருத்தை எடுத்துக்கூற விரும்புகின்றோம். மாநாட்டுக் கருத்தரங்கில் உரையாற்றிய மேனாட்டவர் சிலர் தமிழ்க் கோடரிக்காம்பும் ஆரிய அடிமையுமான திரு. வையாபுரியார் தமிழ்பற்றி ஆங்கிலத்தில் எழுதிய கருத்துகளையே அடிப்படையாகக் கொண்டு பேசினர் என்பதை உண்மைத் தமிழ்ப்பற்றுடையார் எவரும் கண்டு கொள்வார். திரு. வையாபுரியின் தமிழ் பற்றிய ஆங்கில வெளியீடுகள் அனைத்தும் தமிழ் மொழிக்கேற்றம் விளைவிக்காமல், வடமொழிக்கே ஏற்றம் தருப்படி நலிந்தும், வலிந்தும், பொய்யுரை கொண்டும் மெய்யுரை கோடியும் புனையப்பெற்ற புளுகுரைகளாக இருப்பதை உணராத மேனாட்டு மொழியியலாளர், அவற்றையே உண்மையுரைகளாகக் கொண்டு நிற்பதில் வியப்பில்லை. அவற்றை மறுக்கும் ஆற்றல் பெற்ற கருத்துரைகள் யாவும் தமிழ்வடிவிலன்றி ஆங்கில வடிவில் இன்னும் வெளிவரவில்லை. இவற்றைப் பற்றி எந்தத் தமிழ்த்துறைத் தலைவரும் இதுகாறும் கவலுறவில்லை. ஆண்டொன்று மனையொன்றாகக் கணக்கிட்டு வளரும் தமிழ்ப் பேராசிரியத் தம்பிரான்மாரும் தமிழ் என்ன கொள்ளையா போயிற்று? என்று வினவுவதுடன், இலக்கிய நயங்களை நாக்

கில் தேன் தடவிக்கொண்டு மகளிர் கூட்டங்களிலும் மாணுக்கியர் மாணுக்கர் மன்றங்களிலும் மணிக்கணக்கில் பேசிக் காலங்கழிக்கின்ற ணரேயன்றி, மொழித்துறை பற்றியோ, அத்துறையில் நம் கோடரிக் காம்புகள் கட்டிக்கொண்ட பட்டப் பூண்கள் பற்றியோ எவரும் எச் சொல்தானும் சொல்வதில்லை. குறுந்தொகைப் பொழிவும், அகநா னூற்றுச் சொற்பொழிவும், கலித்தொகைக் காதற் காட்சிகளும் நமக்கு உண்மைப் பகைவரை விளக்கிக் காட்டப் போவதில்லை. எண்ணற்ற புதினங்களும், திரைப்படப் பாடல்களும் நமக்குத் தமிழ் உணர்வை யும் தமிழறிவையும் ஊட்டிவிடப் போவதில்லை. பாவாணர் இலக்குவ ஞர் போன்ற உண்மை உணர்வாளர் ஓரிருவரேனும் தமிழகத்தில் இருந்துகொண்டிருப்பதால்தான் தமிழும் இருக்கின்றது; தமிழகமும் இருக்கின்றது. இல்லையேல் என்றைக்கோ வடவரின்–பார்ப்பனரின் சூழ்ச்சிப் பாசிக்குள் சிக்குண்டு திக்குமுக்காடிப் போயிருக்கும். எனவே தான் மேனுட்டார் உண்மையான தமிழையும் தமிழ் வரலாற்றையும் மொழியியல், வரலாற்றியல் ஆய்வுண்மைகளோடு ஒப்புக்கொள்ளும் படி செய்யும் ஆங்கில நூற்களும் கட்டுரைகளும் ஏராளமாக வெளி வருதல் வேண்டும். இவ்வேலைக்குத் தகுதியான ஓரிருவருள் மிகவும் ஆற்றலுள்ளவர் நம் பாவாணரவர்கள்தாம். இக் கருத்தைத் தென் மொழி பன்முறை எடுத்துப்பேசியும் பயனில்லை. இக்கருத்தைத் தி. மு. க. அரசினரும் அறியாதவர் அல்லர் இதுபற்றி முரசொலி' பொங்கல் மலரிலும் பேராசிரியர் திரு. தி. இரா. அரங்கராசன் அவர்கள் வெளி யிட்டுள்ளார். ஆனல் தமிழரின் போகூழ் என்னே! பாவாணருக்கிட்ட இலை பொத்தல், இலை பொததல் என று நாம் கதறிக்கொண்டுள்ள போதுதான், 'அவரைப் பந்திக்கு யார் அழைத்தவர்?' என்று கேட் பது போன்று மாநாட்டில்-கருத்தரங்கில் அவர் கருத்துகள் விலக்கி வைக்கப்பட்டன. இவ்வருத்தம் ஈடுசெய்ய வியலாத ஒன்று. இவ் விழிப்பு நம்மை மேலும் மேலும் ஆரியச் சேற்றுள் அழுந்தவைக்கும ஒன்று. இக்கரிசு நாம் துடைத்துப் போக்க முடியாத-அறுத்தெறிய முடியாத முதுகுச்சுமை!

திரு. அண்ணுத்துரை அவர்களும் அவருக்கு வலக்கையாக இருந்து இயங்கும் திரு. கருணுநிதி அவர்களும் ஒன்றை அறிந்து கொள்ளுதல் நலம். உலகத்தமிழ் மாநாட்டு அமைப்புகளில் திரு. வையாபுரியின் பிறங்கடையும் தமிழ் வளர்ச்சிக்கே தடைகல் லாக உள்ளவருமான திரு. வி. ஐ. சுப்பிரமணியம் போன்றவர்களே

எப்படி இன்றும் இனங்கண்டு கொள்ளாமல் இருக்கின்றீர்களோ நாம் அறியோம். இத்தகைய தமிழ்க்கேடர்கள் அருகிருப்பவும் க. சந்தானம் போன்றவர்கள் துணையிருப்பவும் நிகழ்ச்சிகள் நடந்த காரணம் பற்றித்தான் பாவாணர் போன்ற தமிழ்த் தலைவர்களுக்கு மாநாட்டுப் பந்தலுக்குள் வரவும் வாய்ப்பில்லாமல் போய்விட்டது போலும்!

இனி, மலைநாட்டில் நடந்த நிகழ்ச்சியில் நாம் இங்கிருந்து கொண்டு என்ன குறையைக் குரல்வலிக்கச் சொன்னேமோ அதே குறையை இக்கால் நெஞ்சுவலிக்கச் சொல்ல வேண்டியுள்ளது. கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரைகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருந்தது வெட்கத்தக்கதாகும். ஏறத்தாழ நூற்று ஐம்பத்து மூன்று கட்டுரைகளில் நூற்று இருபத்து நான்கு கட்டுரைகள் ஆங்கிலத்திலேயே படிக்கப்பெற்றன என்ருல் தமிழ் நாட்டின் அமைப்புப் பற்றி நாம் என்ன பெருமைபட்டு என்ன பயன்? தமிழ்பற்றி ஆராயப் புகுந்த ஒரு மாநாட்டில் ஆங்கிலப் பேச்சு ஆறில் ஐந்துபங்கு இருந்தது என்ருல் ஆராயப்புகுந்தது தமிழையா? அன்றி ஆங்கிலத்தையா? தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும் பயன்படாத தமிழ்-தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் வலிவற்ற தமிழ்த்தாய் ஆங்கிலச் செவிலியின் துணையுடனன்ரே தன் மக்களுக்கு உணர்வுப்பால் ஊட்டவேண்டியுள்ளாள்! இது படிக்கவும் கேட்கவுமே நாணுத்தருகின்ற செயலாக வன்ரே உள்ளது. தன் கட்சியை என்னவென்று விளக்கிச் சொல்லத் தெரியாத கட்சிக்காரனையும், கட்சிக்காரன் சொல்வதைப் பற்றியே கவலைகொள்ளாத வழக்கறிஞரையும் அன்ரே நாம் இத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கு மேடையில் பார்க்க வேண்டியிருந்தது. இதில் இன்னும் வேடிக்கை என்ன வென்ருல் தனக்காக வழக்கறிஞர் எவ்வாறு வழக்காடுகின்ருர் என்பதைக் கூட அறியமுடியாத செவிடனுகவன்ரே தமிழன் உரிமைக்கு ஊரைக்கூட்டி யிருக்கின்ருன். இனி இவற்றைவிட இன்னும் வியப்பான ஆனுல் வருத்தமான செய்தி ஒன்று. தமிழக முதலமைச்சர் திரு. அண்ணுத்துரை அவர்களும் அங்குப்போய் ஆங்கிலத்தில் உரையாற்றியதே! தமிழகத்தில் தமிழக அரசுக் காலத்தில் தமிழ் வளர்ச்சிக் காலத்தில் நடந்த தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் தமிழில் உரையில்லை யென்ருல், அடுத்துப் பாரிசில்

நடைபெறவிருக்கும் மாநாட்டிலா தமிழில் நிகழ்ச்சிகள் நடைபெறப் போகின்றன என்று தமிழர் எதிர்பார்த்திருக்கின்றூர்?

இன்னொரு கருத்தையும் இக்கால் வெளிப்படுத்தியே ஆகல் வேண்டும். வெளிநாட்டு (குறிப்பாக ஆங்கிலேயரின்) நாகரிக மரபைப் பற்றியும், மொழிச் சிறப்பைப் பற்றியும் இங்குள்ளார் பேசவோ எழுதவோ ஆயவோ செய்யின் அவற்றை அவர்கள் ஒப்புவதில்லர்; காரணம் அவ்வாறு ஆய்வுக் கருத்துகளை வெளியிட விரும்புபவர்கள், அவர்களின் நாட்டிற்கே போந்திருந்து 10, 20 ஆண்டுக் காலமாகிலும் அவர்கள் மொழி, பண்பாடு முதலியவற்றில் நேரிடையாக ஈடுபட்டு அறிந்தாலொழிய; அவற்றை இங்கிருந்து கொண்டே நூல்கள்வழி அறிவதும் கருத்தறிவிப்பதும் மேனுட்டாருக்கு ஒப்பமுடிந்த கருத்தன்று. இம்முறையினை நாமும் வரவேற்கின்றோம். ஏற்றும் கொள்ளுவோம். ஆனால் இஃதிவ்வாறிருக்க மேலைநாட்டு அறிஞர்கள் மட்டும், தமிழகத்தில் ஓரளவு தூய தமிழ் வழங்கும் திருநெல்வேலி, மதுரை மாவட்டச் சிற்றூர்ப் புறங்களில் போய்த்தங்கியிருந்து அங்குள்ள மக்களிடம் நேரிடையாகத் தொடர்பு கொண்டு ஒரு நாளேனும் பழகியிராமல், வையாபுரி, வி. ஐ. சுப்பிரமணியம் முதலிய கோடரிக்காம்புகள் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு நம் மொழி பற்றியும், பண்பாடுபற்றியும் கருத்தறிவிக்க நாம் எவ்வாறு ஒப்புவது? திரு. அண்ணுத்துரையவர்கள் அண்மையில் அமெரிக்கா சென்று ஏல் பல்கலைக் கழகத்தில் தமிழில் சொற்பொழிவாற்றுவாரா? அவர் அவ்வாறு அங்குப் போய்ச் சொற்பொழிவாற்றுவதானுலும், தமிழ் மொழிக்கென்று தாமே அமைத்த ஒரு கருத்தரங்கில் ஆங்கிலத்தில் பேசியிருக்கலாமா? இது தமிழைப் பெருமைப் படுத்துவதாகாது. தமிழால் நம்மையும் பெருமைப் படுத்திக்கொண்டது மாகாது. இந்நிலையில் நாம் படிமம் வைத்துப் பெருமைப் படுத்திய போப் அவர்களின் கூற்று நினைதற்குரியது இக்கூற்றை மாநாட்டு நிகழ்ச்சியில் பங்குகொண்ட ஐரோப்பியரும் சமயத்துறவோருமான திரு. நியூபிகின் அடிகள்கூட நினைவு படுத்தினுர். “தமிழக இளைஞர்கள் ஊக்கத்துடனும் திறமையுடனும் ஆங்கிலக் கல்வியில் மேம்பட்டு நிற்கின்றனர். அவர்கள் தங்களின் வியக்கத்தக்க ஈடு இணையற்ற தமிழ் மொழியைப் புறக்கணிப்பது குறித்து வருந்துகின்றேன்” ·

கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகளும் பெரும்பாலும் தமிழுக்கு ஏற்றந்தருமாறு இல்லை. 'கி. மு. இரண்டாம் நூற்றுண்டிற்கு முன்னர் தமிழில் எழுத்துகளே இல்லை' யென்று ஐ. மகாதேவன்குறிப்பிட்டதை,வையாபுரியார்கட்டுரைவழிநின்ற ஆங்கிலேய மொழியியல் அறிஞர் சிலரும் ஒப்புக்கொண்டனர். இது தமிழுக்குப் பெருத்த இழுக்கு. அவர்கள் கட்டுரையைப் படிக்க விட்டது குற்றமன்று. அவர்களை வரவழைத்து மேடையேற்றியதே கடுங்குற்றமாகும். பால்போன்ற வெள்ளையா, பனி போன்ற வெள்ளையா என்ற ஆராய்ச்சிக் கருத்தரங்கில் "வெள்ளையே அன்று; கறுப்பு" என்ற கருத்தை வெளியிடுவதும் ஆராய்ச்சிதானு? கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்கு முன் தமிழில் எழுத்தே இல்லையென்ருல் கழக இலக்கியங்கள் என்ன எழுத்தில் எழுதப்பட்டிருந்தன? ஐயாயிரமாண்டுகளுக்கு முன் தோன்றிய (பாவாணர் கருத்துப்படி) தொல்காப்பியம் எந்த எழுத்தில் எழுதப்பட்டது? இக்கருத்தை வெளியிட்ட ஐ. மகாதேவனைக் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளாமல் அவருக்கு அமைதி சொல்லிக்கொண்டிருந்தது எத்துணைப்பெரிய முடத்தனம்! தாலாட்டுப் பாடவேண்டிய நேரத்தில் ஒப்பாரி பாடுவது-அதைக்கேட்டுக் கொண்டிருப்பது எத்துணை பெரிய குற்றமோ, அத்துணை பெரிய குற்றமாகும் இது. ஆராய்ச்சி என்ற பெயரால் இத்தகைய பூசல்களை அவிழ்த்து விட்டது குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக் கொண்டதாகாதா? க. சந்தானம் என்பவர் "வடமொழி, தமிழ் இவற்றில் எது மிகப்பழமைவாய்ந்தது என்று உறுதிப்படுத்தவழியில்லை (I donot think it is possible to say definitely whe--ther Sanskrit or Tamil is the more ancient language)" என்று வேறு கூறியிருக்கின்ருர். கூற வழியில்லையா? கூறத் தெரியாதா? பாவாணர் மேடையிலிருந்திருந்தால் அவர் செவிப்பறை அற்று வீழுமாறு அவருக்குச் சொல்லறை வழங்கியிருப்பார். தம்மால் முடியாவிட்டாலும் தக்காரைக் கொண்டாவது தம்மைக் காப்பாற்றிக் கொண்டிருக்கலாமே தமிழக அமைச்சர்கள். இனி, தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாவிட்டாலும், தமிழையாவது காப்பாற்றி யிருக்கலாமே!

மேலும் இதே க. சந்தானம் என்பவர் "வடமொழியில் மிகப் பழமையான வேதம், உபநிடதங்கள், இராமயண, மகா

பாரதப் பழங்கதைகள, தமிழில் நமக்குக் கிடைத்திருக்கும் தொல் காப்பியத்தைக் காட்டிலும் பழமையான இலக்கியங்கள் என்பது உண்மையே". என்று கூறியுள்ளார். வேதகாலம் கி. மு. 1500—1000க்கு உட்பட்டது. தொல்காப்பியமோ கி. மு. 3000க்கும் முற் பட்டது. எந்த அடிப்படையில் இவ்வாறு கூறினரோ நாம் அறி யோம். இத்தனைப் புளுகர்களையும் அறிமுகப் படுத்தி வைத்த நிலைகளால் விளைந்த பூசல்களைப் போக்கிக்கொள்ள நாம் இது போன்ற எத்தனை மாநாடுகள்-கருத்தரங்குகள் நடத்தினலும் போதாவே! இப்படிப்பட்ட பூசல்களை இன்னுமா நாம் வளரவிட் டுக் கொண்டிருப்பது? இந்நிலை மிகவும் இரங்கத்தக்கது!

இனி, திரு. மயிலை. சீனி, வேங்கடசாமி அவர்கள் ஒரு கட்டுரை யில் 'தொறு' என்னும் சொல்வரலாற்றை எழுதியிருந்தார். அதில் 'தொறு' என்றும் சொல் "தமிழ்ச் சொல்" அன்று என்றும், சிறிய ஆசியா (ஆசியா மைனர்) என்னும் நாட்டின் வடபகுதியில் தவ்ருஸ் மலைகள் இருக்கின்றன என்றும், செமிட்டிக் மொழியினர் இந்த மலை களுக்கு இப்பெயரை இட்டனர் என்றும், செமிட்டிக் மொழியில் தவருஸ் என்ருல் எருது என்று பொருள் என்றும், இந்தச் சொல்லே கிரேக்க மொழிவழி தமிழ்மொழியில் புகுந்தது என்றும் குறிப்பிட் டுள்ளார். இத்தகைய மொழியாராச்சியாளர்க்கு மொழிப் பேரறிஞர் பாவாணர் அவர்கள் ஓர் உவமை கூறி ஒரு கருத்தைக் கூறுவர். ஒரு மரத்தினின்று சிதறிய இலைகளை எடுத்து வைத்துக்கொண்டு இவ் விலைகளினின்றே இம்மரம் வந்திருக்க வேண்டும் என்பதைப் போன் றது இஃது என்பர் பாவாணர்.

தொறு என்னும் சொல் கிரேக்கத்திலும் செமிட்டிக் மொழியிலும் எருதைக் குறிப்பதாய் இருக்க, தமிழில் ஆட்டை மட்டுமே அதுவும் சிறப்பாகச் செம்மறியாட்டை மட்டுமே இச் சொல் குறிக்கும். அவர் எடுத்துக் காட்டிய கழகப் பாடல்கள் ஏழிலும் அச்சொல் செம் மறியாட்டையே குறிக்கின்றது. ஓரிடத்திலும் அச்சொல் எருதைக் குறிக்கவில்லை, பிங்கல நிகண்டிலும், வீரமாமுனிவரின் சதுரகராதியி லும் அச் சொல் ஆநிரையைத் தொகுதிப் பெயராகக் குறிக்கும் என் றிருக்கின்றதே யன்றி எருதை மட்டும் தனியே குறிப்பதாக இல்லை.

இனி, தொழுவத்தைக் குறிக்கும் 'தொறு' வேறு. செம்மறியாட் டைக்குறிக்கும் 'தொறு' வேறு.

செம்மறியைக் குறிக்கும் தொறு 'துரு' வென்ற சொல்லின் மருவு துள்–துளு–துரு–நீக்குதல் ஆட்டினத்தில் செம்மறியாட்டினின்று மட்டுமே மயிர் நீக்கப் பெறுதலால் அது துருவை எனப்படும்.

துள்–துரு–துற–துறவு–உலகப் பற்றினின்று நீங்குதலைக் குறிக்கும் துறவு என்பதற்கும் அதுவே வேர்ச்சொல் என்பது பாவாணரின் துணிபு.

இனி துறு–செறிவு.

துள்–தொள்–தொழு–தொகு–தொகுதல்–கூடுதல்

ஆடுமாட்டின் தொகுதி-தொழுவம்.

துள்–துண்–துணர்–கொத்து, பூங்கொத்து.

துள்–தழு–தழுவு–கூடுதல் நெருங்குதல்.

பிறவிரிவுகளைப் பாவாணரின் 'முதல் தாய்மொழி'யில்' காண்க.

இனி, ஆட்டினப் பொதுவையும் சிறப்பையும் குறிக்கத் தமிழில் அருணம், மோத்தை, அசம், உதள், உடு. கொச்சை, ஏழகம், வற்காலி, துள்ளல், பள்ளை, வெள்ளை, வருமை, கடா, மை, மறி, வெறி, கொறி, சாகம், புருவை, தகர், திண்ணகம், செச்சை, வரை என்னும் 23 சொற்களிருக்க. துருவை என்ற சொல்லைமட்டும் கிரேக்க மொழிவழி செமிட்டிக் மொழியினின்று தமிழன் பெற்றான். என்பது நகைக்கத்தக்கதாகும். இக் கட்டுரையில் இவர் மத்திகை, சுருங்கை, நாவாய், கலம், கன்னல் முதலிய தூய தனித்தமிழ்ச்சொற்களையும் கிரேக்கத்திலிருந்து தமிழ்கடன் பெற்றுக்கொண்டதாகக் காட்டியிருப்பது மிகவும் வருந்தத் தககது.

இத்தகைய ஆய்வுரைகள் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கில் இடம் பெற்றது தமிழை எந்த வகையானும் தூக்கி நிறுத்தியதாகாது. மாறாகத் தூக்கிலிடுவதாகும்.

இவையன்றி திரு. கமில் சுவலபில் அவர்கள் பேசிய பேச்சுகளும் அவர் 2–1–68 அன்று செய்தியாளர் கூட்டத்தில் வெளிப்படுத்திய கருத்துரைகளும் ஒருவாறு வரவேற்கத்தக்கன. "தமிழ் எழுத்துச் சீர்திருத்தமென்பது தேவையற்றது; உலகில் எந்த மொழி வரி வடிவத்திலும் காணப்படாத தனிச்சிறப்புகளைத் தமிழ் வரி வடிவத்தில் காணலாம், ஆங்கிலத்தில் அத்தகைய அழகு கிடை

யாது. தமிழில் ஓர் எழுத்தினைப் பலுக்கும் பொழுது எழுகிற ஓசை நயத்திற்கேற்ப அதன் வரிவடிவத்தின் அழகும் அமைந்திருக்கும். தமிழ் வரிவடிவத்தில் சீர்திருத்தம் இன்று மட்டுமன்று! இனி என்றுமே தேவையற்றது" என்று அவர் கூறிய கருத்தும், "உயர்ந்த இலக்கியத்தையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் கொண்ட உயர் தனிச் செம்மொழியான தமிழைத் தனி அக்கறையோடு ஆராய்ச்சி செய்திட விரும்பித் தமிழியலை (THAMILLOLOGY) என்ற சொல்லால் அமைத்தோம். உலகின் பல பல்கலைக் கழகங்களும் இச்சொல்லை இக்கால் ஏற்றுக் கொண்டன" என்ற கூற்றும் தமிழுக்குப் பெருமை தரத்தக்கன. பெரியார் ஈ. வே. இராவும், அவரைச் சார்ந்த கழக மணிகளும் இக்கருத்துகளை ஆழ்ந்து படிக்க வேண்டுகின்றோம்.

இனி. திரு. கமில் சுவலபில் அவர்கள் தனித்தமிழ் பற்றியும் ஒரு கருத்தை அவர் கருத்தரங்கில் படித்த கட்டுரையில் வெளியிட்டுள்ளார். அது வருமாறு:-

"Love of One's own language and culture can take a highly dangerous and wayward turn...... Ttends started by scholors and writers like Maraimalai Adigal (Swami Vedachalam), S. S. Bharathi and Bharathidasan, have achieved vast and hideous proportions and have proved murderous to real free creativity. Barriers to any Communication—political, linguistic, cultural or artistic—have never proved suceessful in the long run. Also, they have to fall, sooner or later."

–இவருடைய கருத்துப்படி மறைமலையடிகளார் சோமசுந்தர பாரதியார், பாரதிதாசனார் இவர்கள் தொடங்கிய இவ்வியக்கம் வெற்றி பெறிக்கப் போவதில்லை என்பதும், அவை இன்றோ நாளையோ அழிந்தொழியும் என்பதும் நாம் முன்னர் குறிப்பிட்ட தமிழகத்தில் வாழ்ந்து பாராத தன்மையாலும், வையாபுரியார் போன்ற தமிழ்க் கோடரிகளின் பின்னணியாலும் விளைந்தவையாகும். கழக இலக்கிய இலக்கண நூல்களைப் பாராமல் பிற்கால இலக்கியங்களைப் பார்த்தே தமிழ் மொழியின் ஏற்றங்கூறிய கால்டுவேலர் பிழைபட்டதுபோல் இவர் கொண்ட இப்பிழையான கருத்தும் வலிவற்றுப் போவதைக் காலமும், பெருகிவரும்

தமிழிளைஞர் கூட்டமும் உணர்த்தப் போவதை உலகு காணத்தான் போகின்றது.

இனி, மாநாட்டில் அமைக்கப்பெற்ற படிமங்களில் பாவேந்தர் படிமமும் ஒன்று. அவரிடம் ஒன்றிப் பழகிய காரணத்தாலும, அவர் குடும்பத்தாரிடம் கொண்ட அன்பாலும் ஒன்றைக்குறிப்பிட விருப்புகின்றேம். பாவேந்தரின் துணைவியாருக்கும், அவரின் திருமகனுக்கும் மாநாட்டின் தலையாய நிகழ்ச்சியாகிய படிமத் திறப்பு விழாவில் பங்கு பெறும் வாய்ப்பைத் தராதது மிகவும் வருந்தத்தக்கது. அவருக்குப் படிமம் வைப்பதால், கடன் சேற்றிலும் வாழ்வியல் படுகுழிகளிலும் விழ்ந்து கிடக்கும் அவர் குடும்பத்தைக் காத்ததாகாது. பாவேந்தர் தம் சமூகத்தின்மேல் கொண்டுள்ள வெறுப்பை நினையாது, அவர் தமிழுக்கும் நலிந்துகிடந்த தமிழ்க் குமுகாயத்திற்கும் ஆற்றிய அருந் தொண்டைப் பெரிதெனக் கருதி அவரைப் பாராட்ட எண்ணிய தமிழக அரசு அவர் குடுமபத்தாரைத் தக்கபடி மதித்துப் பாராட்டியிருக்கலாம். அதற்கு இத்தமிழ் மாநாட்டைவிடப் பிறிதொரு வாய்ப்பு கிடைக்கும் என்று வாளா விருந்தனரா அறியோம். ஆனல் பாவாணர்க்கே சரிவர மதிப்பளியாத தமிழக அரசினர் பாவேந்தர் குடும்பத்தாரைப் புறக்கணித்தலும் வியப்பன்று.

மாநாட்டிற்கெனத் தொகுக்கப் பெற்ற தொகைக் கணக்குப் பற்றிப் பலவாறும் பேசப்பட்டு வருகின்றது. தொகை எவ்வளவாக விருப்பினும், அதனைப் பயனுள்ள வழிகளில் செலவு செய்யப்படுவதே அவர்க்கும் தமிழர்க்கும் பெருமை தருவதாகும். பல்கலைக் கழகங்களில் நடைபெறவிருக்கும் திருக்குறளாராய்ச்சி தேவையே இல்லை. (இதைவிடத் தொல்காப்பிய ஆராய்ச்சி பயனளிக்கும்) திருக்குறளில் ஆராய்ச்சி நடத்துதல் இக்கால் இன்றியமையாத ஒன்றன்று. அவ்வாறு அதனை ஆராய்வதாயினும் பிறகால் அதுபற்றி முயல்வதே டண்பும் பயனும் உடையது. அத்தகைய எச்சத் தொகைகளைக் கொண்டு தமிழ் மறுமலர்ச்சிக் கழகம் ஒன்று அமைத்தலே தக்கதும், உடனடித் தேவையுமாகும். அதுவன்றிக் கீழுள்ள முயற்சிகளிலும் அரசு ஈடுபடுவது மிகவும் பயன்தருவதாகும்.

(அ) பாவாணர் அவர்களைக் கொண்டு மொழியியல் அகரமுதலி சொல்லியல் அகரமுதலி, வேர்ச்சொல் அகரமுதலி–மூன்றையும் தனித் தனியாகவோ, ஒன்ருகவோ ஈடும் எடுப்புமற்ற முறையில் வெளியிடு

வது தமிழ்மொழியை எக்காலத்தும் நிலைநிறுத்தும் தூண்போன்ற செயலாகும்.

(ஆ) அமைக்கின்ற தமிழ் மறுமலர்ச்சிக் கழகத்தாரைக்கொண்டும், திரு. தி. வை. சொக்கப்பா போன்ற உண்மையான தமிழ் வரலாற்றாசிரியர்களைக் கொண்டும் தமிழக வரலாற்றை அடிமுடியாக எழுதி முடித்துக் கொள்வது.

(இ) தமிழக அரசுச் சார்பில் என்றென்றும் இயங்கவல்ல நூல் வெளியீட்டுக்குழு ஒன்றும், நூல் அரங்கேற்றுக்குழு ஒன்றும் ஏற்படுத்துதல். அரங்கேற்றக் குழுவில் அரங்கேறிய நூல்களையே கருத்தாணை (Authority) பெற்ற நூல்களாக அரச முத்திரையுடன வெளியிடல். அத்தகைய முத்திரை நூல்களையே பின்பற்றுமாறு உலக மொழி, பண்பாட்டு, வரலாற்று, கலைக்கழகங்களுக்கு அறிவித்தல். அத்தகைய நூல்களன்றிப் பிற தனி வெளியீடுகளைத் தக்க வெளியீடுகளாக மக்கள் மதியாமற் செய்வதும் அறிவித்தலும் ஆகும்.

(ஈ) திரைப்படங்கள், தாளிகைகள், விளம்பரங்கள் முதலியவற்றில் தமிழ்மொழி, பண்பாடு, வரலாறு இவற்றிற்குக் கேடுபுரியும் செய்திகளைத் தலையிட்டுத் தடுத்தல்.

(உ) தக்க மொழி, வரலாறு, கலை, அறிவியற் புலவர்களை ஆண்டுக் கொருமுறை அழைத்து அரசவைச் சிறப்புச் செய்து, அவர்களைப் புரத்தலும். சட்டமன்றங்களில் அத்தகைய புலவர் குழுவின் பத்துப் பெயர்களுக்கு உரிமம் வழங்குதல். (இங்கிலாந்தில் உள்ள Lord மன்றத்தினர் போல அவர்களின் அரசியல் கருத்துகளுக்கும் மதிப்பளித்தல்).

(ஊ) உலகத் தமிழ்ப் பண்பாட்டுப் பரப்புக் கழகம் அமைத்தல்

(எ) தமிழில் அறிவியல் நூல்கள், மொழியியல் நூல்கள் எழுதுவோரை மிகவும் ஊக்குவித்தல்.

உலகத் தமிழாராய்ச்சிக் கழக அமைப்பு பற்றி மாநாட்டில் கருத்தெழுந்த பொழுது முதலமைச்சர் திரு. அண்ணாத்துரையவர்கள் பட்டங்கள் தருவதுபற்றி வெளியிட்ட கருத்துகள் மிகவும் சிறப்புடையவாகும். பட்டங்கள் தருவதை அவர் விரும்பாததுபோல் நாமும் விரும்பவில்லை. அக்கால் அவர், "உயிருள்ள, வளமைமிக்க, நீர்மையுள்ள மொழி தமிழ் என்பதை நான் அறிவேன். நமக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள் சீர்திருத்தம் எதுவும் தேவைப்படாத

மொழிச் செல்வத்தை விட்டுச் சென்றிருக்கின்றனர் அச் செல்வம் மிக உயர்ந்த தரமுள்ள இலக்கியம். தமிழ் மொழியின் காலத்தையும், மூலத்தையும் கண்டறிவதிலும், இலக்கியத் துறையிலும் அன்றுட அலுவல்களிலும் கருத்தைத் தெரிவிக்கும் கருவியாகத் தமிழை எவ்வாறு வளப்படுத்த முடியும் என்பதிலும இன்றைய ஆராய்ச்சியாளர்கள் அக்கறை கொண்டுள்ளனர். கருத்தரங்கில் உருவாக்கப்பட்ட வழிமுறைகள் அவர்களுக்குத் துணையாக இருக்கும். பிற மொழிகளில் அக்கறையுள்ளவர்களிடமிருந்தோ அல்லது தமிழிடம் பராமுகம் காட்டுவோரிடமிருந்தோ தமிழ் மொழிக்கு மிகுந்த நன்மை, பயன் எதையும் நான் எதிர்பார்க்க வில்லை''-என்று கூறியுள்ளார். இக் கருத்து கருத்தரங்கில் ஏற்பட்ட குறைபாடுகளுக்கெல்லாம் முடிவுரையாக அமைந்திருப்பது நாம் மகிழத்தக்கதாக விருக்கின்றது. தன்னுண்மையும், தன்னம்பிக்கையும், தன்முயற்சியும் கொண்ட இக்கருத்தைச் செயல்படுத்த திரு. அண்ணாத்துரை அவர்கள் முயல்வாரானல் நாமும் அவரின் அரிய முயற்சிகளுக்குப் பெருந்துணையாக நின்று இயங்குவோம் என்பதைக் கூறி இதனை முடிக்கின்றோம்.

–பெருஞ்சித்திரன்.

ஆசிரியர்:
மன்னர் மன்னன்

பாவேந்தர் பாடிய 'குயில்' பாவேந்தரைப் பாடுகிறது!
'நினைவு மண்டபம்' படியுங்கள்!
தனி இதழ் 75 காசு.
ஆண்டுக்கட்டணம் 10 உரூபா.

பாரதிதாசன் குயில்
புதுவை-1.

அன்பளிப்பு

தென்மொழி வளர்ச்சியில் நாட்டமும் அக்கறையும் கொண்ட அன்பர்கள் கீழ்க்காணுமாறு அன்பளிப்பு வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு நம் நெஞ்சுகந்த நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

1.	குழற் கோமான், பெங்களூர்-21	5-00
2.	ந. பாலசுப்பிரமணியன், நீடாமங்கலம்.	4-00
3.	பெ. செல்லராமு, கல்லுப்பட்டி.	25-00
4.	குமரமுத்து, கல்லாநத்தம்.	4-00
5.	த. தருமலிங்கம், அல்லாபுரம்.	4-00
6.	சோ. மூர்த்தி, திண்டுக்கல்.	2-00
7.	செ. து. பரஞ்சோதி, திருவைகுண்டம்.	5-00
8,	பி. என். சரவணமூர்த்தி, பெங்களூர்-2.	5-00
9.	அருள்மணி, பெங்களூர்-21.	30-00
10.	மு. இராசேந்திரன், சேலம்.	2-00
11.	மகா-எழிற்செல்வன், எதுமலை.	2-00
12.	எ. அழகர்சாமி, சண்டிகார்-2.	3-00
13.	அ. பெரியசாமி, பூண்டி.	1-00
14.	ஆறு-கலையண்ணன், கோனுப்பட்டு.	2-00
15.	ம. இளமழகு, பங்களூர்-21.	2-75
16.	செ. கா. சா. காதர் முகைதீன், செய்துங்கநல்லூர்.	5-00
17.	தமிழ் அன்பர்கள், திருச்சி-14.	220-00
18.	தி. பிறைசூடி, தஞ்சாவூர்-1.	5-00
19.	க. தூயஅடியான், சிங்கப்பூர்-27.	47-75
20.	திரு. உணர்வுப்பித்தன், திருச்சி.	100-00
21.	11-2-68 ஆம் நாள் திரு. தங்கராசன் (நைனார்கோயில்) அவர்களுக்கும், திருவாட்டி சுசீலா அம்மையாருக்கும் நடந்த திருமண நினைவாக	8-75

அமைச்சர்.

தென்மொழி, கடலூர்-1.

இலக்கியம்

நூறாசிரியம்

-துரை-மாணிக்கம்-

பாட்டு: ௧௰.

யாங்கியா னுற்றுவ னையே! தூங்குமென்
றுங்குபல் லடிசி லட்ட, ஈங்கிது
நார்ப்பிணை சேக்கை யிழிந்துவெளி நண்ணி,
நீர்வார் செப்பி னளைந்துமண் நிரப்பிச்
சுள்ளி யடுக்கிக் கொள்ளி யூட்டி
வெள்ளிலைப் படைய லாயத்து விரித்துப்
பொய்யி னுண்டோர் பையல் மணந்து
செய்மணற் சிற்றில் வைகி வாழ்தலை
நிற்பா லுறைத்ததுங் கேட்டதும் நிகழ்த்தத்
தற்புதுக் கேள்வன் பின்னகந் தாழ்க்க
நனிசினந் திளையோன் குஞ்சி நலிக்கவன்
'அம்மே' யென, அவள் அடுத்திஃ தலைக்கவீ
'தப்பே' யெனயா னலற வோடி
வெப்புரை மாறி வீடு கிடத்தி
மேற்பணி மேயவிக் கால்குடை சிறுக்கி
மறுகி னிறங்கியப் பீறல் விளித்துக்
கரைக்கு நாணீள் கட்டுரை
உரைக்கப் போதா தெஞ்சிறு நாவே!

பாட்டு: கம.

பொழிப்பு:-

எங்ஙனம் யான் பொறுத்தல் செய்வேன் ஐயனே! தூங்கும் என்று கருதி, யான் அடுக்களைக்கண் பல்வகையா உணவு வகை அடுதல் செய்ய, ஈங்கு இது கிடத்தப்பெற்ற நாரினால் பிணைத்த கட்டிலி னின்று இறங்கி வெளிப்போந்து, நீர் வாரும் செப்பின் மண்ணிட்டுக் குழப்பிச் சுள்ளிகள் அடுக்கித் தீயூட்டிச் சமைத்த மண்சோற்றை வெற்றிலை விரித்துத் தன் கூட்டத்தார்க்குப் படையலிட்டுத் தானும் பொய்க்காட்சியாக உண்டு, அச்சிறுவர் கூட்டத்துள்ள ஒரு பையலை விளையாட்டாக மணந்து கொண்டு, தான் மணலாற் செய்த சிற்றில் மருங்கு வாழ்தல் போலும் பொய்யின் ஆடுங்காலத்து, யான் நம் இல்லத்துக்கண் நின்பால் உரைத்ததும் உரைக்கக் கேட்டதும் போன்ற தோர் உரை நினைந்து இஃது அவன்பால் உரையாடல் செய்ய, அவ்வுரை கேட்ட இதன் புதுக் கேள்வனாகிய அவ்விளையோன், இதனுடைப் பின்னலைப் பற்றி வலித்துத் தலை தாழ்க்க, இது மிகச் சினந்து அவன் தன் தலைமயிரைப் பற்றி வருத்த, அவன் வலிமேலிட்டு 'அம்மே' என அழைக்க, அவன்றாய் அவ்விடத்துப் போந்து இதனைக் கையால் அலைத்தல் செய்ய, ஈது 'அப்பே' எனக் கதற, யான் அலறிப் புடைத்து ஆங்குஓடி, அவன்றாயோடு வெப்பமான உரைகளை மாறி உரைத்து, இதனைப் பற்றியிழுத்து வீடு கொணர்ந்து கிடத்திப் பணி மேற்கொண்டு நான் புறக்கணிப்பாய் இருக்க, கால்குடையா நிற்கும் இச்சிறுக்கி மீண்டும் யானறியாவாறு தெருவில் இறங்கி, அப் பீறல் உடுத்த பையலை விளித்து அவனொடு நாள் முழுதும் நீளும்படி கரைதல் செய்தொழுகும் கட்டுரை முற்றும் நின்பால் உரைத்துக் காட்டுதற்குப் போதுவதாகாதது என் சிறிய நாவே!

விரிப்பு:

இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

தலைவன் பொருள்வயிற் பிரிவதை ஆற்றாத தலைவி, அவன் பிரிவிடைகாலத்து, தன் சிறிய மகளின் அடக்கலாகாக் குறும்புச் செயல்களையும், அவற்றால் தான் படுந்துயரமும் கூறி, அக்காலத்து எவ்வாறு ஆற்றியிருப்பேன் என்று கவன்று கூறியதாக அமைந்ததிப் பாடல்.

தலைவன் பிரிவால் தன் ஆற்றாமையை வெளிப்படக்கூறாது, தன் சிறு மகள்மேல் ஏற்றிக்கூறி, அவன் பிரிவைத் தவிர்க்க வேண்டினள் என்றபடி.

தலைவி, தன் குறும்பு மகளால் படுதல் தன் மனத்திற்கு மகிழ்ச்சி தருவதொன்றே எனினும், அதனைத் தான் படுந்துயரே போல் இட்டுக் காட்டுதல் ஏனெனின், தலைவனின் பிரிவைத் தடுத்து நிறுத்த வேண்டியே என்க. இனித் தன்னையும் தன் குழவியையும் பிரிந்து செல்ல விரும்புவானுக்குத் தன் மகளின் பிள்ளைக்குறும்பை நினைவூட்டிக் கூறுதல், மீதுற்றக் குழந்தையின் நினைவால் அவன் உள்ளம் பேதுற்றுப் பிரிவுக்கஞ்சும் என அவள் கருதினமையும் ஆகும். இனி, குழந்தையின் குறும்புத்தனத்தால் தான்படும் துயர் அவனுக்குத் தன்மேல் கழிவிரக்கம் ஏற்பட வழிவகுக்குமேல் அதனாலும் அவன் செலவு தடைப்படல் நேரும் என்று அவள் கருதினாள் எனினும் பொருந்துவதாகும் என்க.

பிரியத்தலைப்பட்ட தலைவன் தன் போக்கை அவள் விரும்பவில்லை என்பதை முதற்கண் அவனுக்கு உணர்த்த விரும்பியவள், யாங்கு யான் ஆற்றுவன் ஐயே! என்றாள். 'ஐ' என்றது தலைவனை. "ஐ"-தலைவன், 'ஏ' விளி. இரங்கக் கூறியது.
ஆற்றுதல்–பொறுத்தல்-

யாங்கு யான் ஆற்றுவன்? என்பதால் ஆற்றுதற்கியலேன் என்று உணர்த்தினாள் என்க. தலைவனிடம் எதிர்மறையாக ஆற்றியிரேன் எனக் கடுத்துக் கூறுதல் மனையுறை மகளிர்க்கொத்த தன்றாகலின், எங்ஙன் ஆற்றியிருப்பேன்? என்று இரங்குதல் வினாவாகத் தொடுத்துக் கூறினள் என்றபடி. அவள் இயலாமையை அவன் உய்த்துணர்ந்து கொள்வதே சால்புடையது என்று அவள் கருதினாள் என்க.

இனி, எங்ஙன் ஆற்றியிருப்பேன் என்று தன் இயலாமையைக் கூறிய அவள், அதற்குரிய காரணத்தையும் அடுத்துக் கூறத் தொடங்கினாள் என்க. அஃதன்றாயின், அவன் தன் பெண்மைக்கு இழிவு கருதலாம் என்று அவள் அஞ்சினாள் என்க.

தூங்கும் என்று........அட்ட:- குழந்தையைத் தூங்கவைத்து, அது தூங்கிக்கொண்டிருக்கும் பொழுதிலேயே, தனக்குற்ற சமைத்தல்

தொழில்களைச் செய்துக் கொள்ளலாம் என்ற கருத்தில் அவற்றில் ஈடு பட்டாள் என்க.

அடிசில்:- அடுதல் தொழிலால் பண்ணப்படுவதாகலின் உண வைக்குறித்தது. அடுதல்-சமைத்தல். அடு-கொல், தீயிடு. பச்சைக் காய்கறிகளைக் கொல்லுதலும் தீயிடுதலுமாகிய தொழில் ஆகலின் அடுதல் சமைத்தல் என்றுயிற்று. இனிக் கொல்லுதலும் தீயிட்டழித் தலுமாகிய தொன்றுகலின் போரிடுதலும் அடுதல் எனப் பெயர் பெற்றது.

ஈங்கு இது:- இது வென்றது குழந்தையை.

நார்ப்பிணை சேக்கை:- நாரால் இழுத்துப் பின்னப்பெற்ற கட் டில். சேக்கை-சேண் வேர்ச்சொல். உயரத்தைக் குறிப்பது. உறங்குங் கால் உயர்வான இடங்களிலேயே உறங்குதல் இயல்பாகலின் சேண் என்ற வேரடியாகச் சேக்கை என்ற சொல்பிறந்து படுக்குமிடத்தைக் குறித்தது.

இழித்து:- நழுவி. கட்டிலினின்று ஓசைப்படாது இறங்கி. ஓசைப்படாது இறங்கியது குழந்தையின் வலக்காரத்தைக் காட்டும்.

வெளி:- விரிந்த இடத்தைக் குறிக்கும் சொல்-விள் வேர்ச்சொல். விள்-விரிவு; விளர்-விளக்கம்-முதலிய சொற்களை ஓர்க. விள்-வெள்-வெளி.

நீர்வார் செப்பு:- நீர் மொள்ளும் செப்பு.

அளைந்து:- குழப்பிச் சேருக்கி.

சுள்ளி:- சிறுசிறு விறகுச் செதிள்கள்.

அடுக்குதல்:- அவற்றை எளிதில் தீப்பற்றுமாறு ஒன்றன்மேல் ஒன்று இடைவெளி தோன்ற அடுக்கி வைத்தல்.

கொள்ளி:- பற்றப்படுவதாகிய தீ.

ஊட்டி:- பற்றுமாறு செய்து.

வெள்ளிலைப் படையல்:- வெள்ளிய இலை-வெற்றிலை. விளையாட் டயரும் சிறு மகளிர்தாம் மண்ணால் சமைத்த சோற்றை வெற்றிலையில் பரிமாறினர் என்பதாம்.

ஆயம்:- விளையாடும் மகளிர் கூட்டம்.

பொய்யின் உண்டு:- பொய்யாக உண்ணுதல் போலும் மெய்ப் பாடு காட்டி.

பையல் மணந்து:- சிறியோர் விளையாடுங்காலை, பெரியோர் மெய்யின் ஆற்றும் செயலேபோல், தாமும் பொய்யின் ஆடிக்காட்டி மகிழ்வது உலகியல்பாகலின், பெரியோர் தம்முள் மணந்து மகிழ்தல் போலும் தாமும் தம்முள் மணம் செய்வது போலும், மணம் செய்து கொண்ட கணவன் மனைவியர் உரையாடுதல் போலும், நடித்து மகிழ்வர் என்றபடி.

செய்மணல் சிற்றில்:- மணலால் செய்யப்பெற்ற சிற்றில்.

வைகி:- தங்கியிருந்து.

வாழ்தலை:- வாழ்கின்ற பொழுது.

நிற்பால் உரைத்ததும் கேட்டதும்:- யான் நின்பால் இல்லறம் புரியுங்காலத்து உரைத்தவற்றையும், உரைக்கக் கேட்டவற்றையும்.

நிகழ்த்த:- நிகழ்த்திக் காட்ட.

பெரியோர் உரையாட்டு சிறுவரைக் கவருமாகலின், அதுபோல் தாமும் தம் ஆயத்தாரிடைக் கணவன் மனைவியர்போல் உரையாடி மகிழ்வர் என்பதாம்.

தன் புதுக் கேள்வன்:- புதிதாகத் தன்னை மணந்த உரிமையாளன்-கணவன்.

பின்னகம்:- தலைமயிர்ப் பின்னல்.

தாழ்க்க:- தாழும்படி இழுக்க.

உரையாட்டால் சினமும் மகிழ்வும் தோன்றுதல் போலும் மெய்ப்பாடுகாட்டி விளையாடுமிடத்து, சிறியோரும் பெரியோர் போலவே மனைவியர் மயிர்ப்பற்றி உலுக்குதல்; சிறியோர் முன்னர் பெரியோர் இவ்வாறு நடப்பது, அவர்க்கு எத்துணைக் கவர்ச்சியான காட்சியாகப் பட்டு, அதுபோலும் அவர் நடத்திக் காட்டுதற்கு அவரை வழிப்படுத்திக்காட்டும் என்பதைப் பெரியோர் நினைக்க.

நனி சினந்து:- மிகவும் சினங்கொண்டு.

குஞ்சி:- ஆடவர் தலைமயிர்.

நலித்தல்:- வருந்தும்படி செய்தல்.

அவன் 'அம்மே' என:- விளையாட்டாக அவன் தலைமயிரை அவள் பற்றியிழுத்து நலிக்க, அதனால் உண்மையிலேயே வருந்தினான் ஆகலின் அது தாளாது அவன் தன் தாயை 'அம்மே' என விளித்தான் என்றபடி.

அவள் அடுத்து:- அவன் தாய் இவர்களை நெருங்கிவந்து.

இஃது அலைக்க:- இப் பெண்ணைக் கையால் அடித்து வருத்த.

ஈது 'அப்பே' என:- அவன் துணைக்குத் தன் தாயை அழைத்துக் கொண்டது போலவே, இவளும் அவள் துணையினும் வலிந்த துணை வேண்டி, 'அப்பே' என விளித்தாள் போலும்!

யான் அலற ஓடி:- யானும் அலறிப் படைத்து ஓடி.

வெப்புரை மாறி:- வெம்மையான சுடு சொற்களை ஒருவர்க்கொருவர் மாறி உரைத்து.

வீடு கிடத்தி:- தன் மகளைப் பற்றியிழுத்துவந்து மீட்டும் படுக்கையில் கிடத்தி.

மேற்பணி மேய:- விட்ட பணிகளை மேற்கொண்டு ஈடுபட்டுநிற்க.

கால்குடை சிறுக்கி:- கால் குடைந்து நிற்கும் சிறுமி. ஓரிடத்தும் நிற்காமல் ஓடுதலும் வருதலும் ஆகிய கால்களைக் குடைந்து நிற்கும் கால்கள் எனக்கூறலாயிற்று.

மறுகின் இறங்கி:- தெருவில் இறங்கி.

அப் பீறல் விளித்து:- அப்பீறல் உடுத்த பையனை அழைத்து— பீறல்-கிழிந்ததுணி. இழிவு தோன்றக் கூறியது. தன் மகளொடு சேர்ந்து விளையாடுதற்குத் தகுதி யற்றான் என இழித்துக் கூறினள் என்றபடி.

கரைக்கும்:- பொருளற்று வெறும் வாய்ச்சொல்லாக உரையாடல் -காகம்போல் கரைந்து நிற்றல்.

நாள் நீள் கட்டுரை:- நாள்முழுதும் நீளும் தன்மையில் நெடிய உரையாடல்—கதை

உரைக்கப் போதாது என் சிறு நாவே:- உரைத்துத் தீராது என் பதை, அதனை எடுத்துக்கூற என்சிறு நா போதாது என்று கூறினாள் என்றபடி.

'நீ என்னைப் பிரிவேன் என்று கூறுகின்றாய். நான் நாள் முழுதும் குறும்பு மிகுந்த நின் மகளொடு எங்ஙன் ஆற்றியிருப்பேன். அவளை அடக்கவும் ஆகேன். என் மனைவினைகளைச் செய்யவும் அவள் விடுவாள் அல்லள். நாளும் தெருவிற் போந்து அவளொத்த பிள்ளைகளுடன் வாயும் கையும் ஆடி வம்புரைக்கு என்னை ஆளாக்குகின்றாள். அதன் பொருட்டு நான் துயருறுவது மிகுதி. எனவே எம் இருவரையும் விட்டுப் போவது நினக்கு ஏற்றதாகாது'' என்று இறைஞ்சிக் கூறினாள் தலைவி என்க.

இது முல்லை யென் திணையும், பிரிநிலைக்கழுங்கல் என் துறையுமாம்.

O

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ?-முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!

‘மேனாட்டுப் பொன்மொழிகள்’

ஆசிரியர்: எம். சோமசுந்தரம், பி. ஏ., எல்; டி.

கிடைக்குமிடம்: திராவிட இல்லம், காட்டுமன்னார் கோவில்.

விலை: 1-25. (பக்கங்கள். 51)

இஃதொரு மொழிபெயர்ப்புக் கட்டுரை நூல். ஆங்கிலப் பேரறிஞர் எமர்சன், பேக்கன், இரசுக்கின், அடிசன் ஆகியோர் எழுதிய நயனும் பயனும் மிக்க சில கட்டுரைகளை மொழிபெயர்த்து ஆசிரியர் ‘மேனாட்டுப் பொன்மொழிகள்’ என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார்.

பெரும்பாலும் ‘பொன் மொழிகள்’ என்பன குறுகிய அளவில், நினைவில் வைத்துக் கொள்ளத்தகும் பழமொழிகள் போல் அமையின், அவற்றைப் படிப்பவர் உள்ளங்களில் அவை என்றென்றும் நின்று இழுக்குடை வாழ்விற்கு ஊன்றுகோல்களாகப் பயன் விளைவிக்கும். இந்நூல் இவ்வாறின்றி நீண்ட கட்டுரைகளாக அமைந்திருப்பது, இதனை அணுகுவார்க்கு ஒரு மலைப்பை விளைவிப்பதாகும். மேலோட்டமும் பரபரப்பும் மிகுந்த இக்காலத்து வாழ்வின் உண்மையொளியூட்டும் இதுபோன்ற நூல்கள், தாம் கொண்ட கருத்துகளால், இற்றை மக்களைக்கவர்ந்திழுக்க வேண்டுமாயின் கட்டுரைகள் சுருக்கமும் நெருக்கமும் வாய்ந்து திகழ்தல் மிகவும் வேண்டற்பாலதாம்.

கட்டுரைக் கருத்துகள் மேனாட்டுப் பேரறிஞர்களுடையவாகலின் நாம் அவைபற்றி நிறை கூறுதல் தேவையின்று. மொழிபெயர்ப்பு-செவ்வையாக அமையப் பெறவில்லை. செயற்கை நடைபோல் சலசலத்து ஓடுகின்றது. எடுத்துக் காட்டாக ஒன்று. ‘‘முதுமையின் மதிவலி, தான் பழகிய பொருளுக்கு வழிகாட்டி; புதிய பொருளிடத்து

மாசுடைத்து இளைஞரின் தவறு வினையினழிவு; முதியோர் தவறு விரைவிலும் நிறைவிலும் குறைவுடைத்து"-இச் சொற்றொடர் நூலுள் புகுவார் தம் மனத்தின் விரைவைத் தடுத்து, உணர்வைத் திக்குமுக்காடச் செய்கின்றதன்றோ? ஏழெட்டு முறை திருப்பித்திருப்பிப் படித்தாலும் இச் சொற்றொடர்க் கருத்து எளிதின் உள்ளத்துப் பதியாதிருப்பதை ஓர்க.

'இத்தாலி' நாட்டை 'இற்றலி' எனக்குறிப்பதும், 'பாக்தாது' பட்டினத்தைப் 'பாக்டாட்' என்று பெயர்ப்பதும், தமிழ்நடைக்கு மாசு கற்பிப்பன. வேண்டத்தகா விடத்தும் நுழைந்த வடமொழிக் கலப்பு, நூல் வெளியீட்டாண்டு 1948 ஆகலின் பொறுத்தற்குரியதாம்.

மொத்தத்தில் உயிர்க்கருத்து; உடல் நலமில்லாத நூல்!

-குட்டுவன்.

'தென்மொழி' தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,
4-ஆம் வகுப்பு—8-ஆம் கட்டளைப்படி)

1.	வெளியிடும் இடம்:	கடலூர்-1.
2.	காலமுறை:	திங்கள் ஒரு முறை.
3.	அச்சகத்தார்:	மா. தாமரை. தென்மொழி அச்சகம், கடலூர்-1.
	இனம், முகவரி:	தமிழர், கடலூர்-1.
4.	வெளியிடுவோர்:	பெருஞ்சித்திரன்
	இனம்:	தமிழர்.
	முகவரி:	தென்மொழி அச்சகம், கடலூர்-1.
5.	ஆசிரியர் பெயர், முகவரி:	பெருஞ்சித்திரன், கடலூர்-1.
6.	ஒரு விழுக்காட்டிற்கு மேல்முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம் பெயர்களும், முகவரிகளும்	பெருஞ்சித்திரன். கடலூர்-1.

பெருஞ்சித்திரனாகிய நான் இவ்வுறுதி வழிமேலே காணப் பெறும் விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை முற்றிலும் உண்மையென முடிவாக அறிகின்றேன்.

1—3—68
கடலூர்-1.

—பெருஞ்சித்திரன்,
ஒப்பம்.

முறையில் தமிழ் அகரவரிசை, மெய்வரிசை முறையில் வடமொழி எழுத்துகள் அமைந்தன.

மொழி நூலோர் உலக மொழிகளுக்கு முதல் வேராகத் தமிழே விளங்கிற்று என்று நிலைநாட்டியுள்ளனர். உலகின் வடமுனையிலுள்ள காமச் சட் கா (Kamatchatka) என்ற உருசியப் பகுதியில் பேசப் படும் மொழி தமிழை ஒட்டியதென்று, வரலாற்றறிஞர் அண்டர் (Sir. Hunter) கூறுவர்.

இத்தாலி, இடசுக்கானி பகுதியில் பேசும் மொழி தமிழின் திரி பாம். ஐரோப்பாவின் மேற் பாகத்திலுள்ள ஐபீரியா நாட்டின் (Spain) பிரனிசு மலையடி வாரத்திற் குடியேறியுள்ள 'பாசுக்கு' (Basques) இனத்தார் திராவிட மொழியின் தொன் மொழியைப் பேசுகின்றனர். தமிழிலுள்ள ஐந்து குறில்களே இலத்தீன் மொழியில் ஐந்து இலக் கணப் பிரிவுகளாக அமைந்துள்ளன.

இந்திய மொழிகள் அனைத்திற்கும் அன்னையாகவும், பாட்டியாக வும் அமைந்தது தனித்தமிழே. ஆகவே உலகமொழிகளில் தமிழின் நடை, எழுத்து, முறை, மரபு, ஒலி, இலக்கணம், கூட்டு, கொள்கை, நெறி, ஒழுகலாறு, வரையறை, நெடுங்கணக்கு, எண்ணக்கூறு, அமைப்பு ஆகியவை ஊடுருவியுள்ளன என்பது அறிவுலகத்தீர்ப்பாம். குறளின் எண்ணம், மரபு உலக இலக்கியங்களை ஊடுருவியதற்குரிய வாய்ப்பு இதனால் தெற்றென விளங்கும். தமிழறமே உலக அறமாகக் கிளைத்துப் படர்ந்துள்ளது என்பது உண்மையே.

ஆரியர் இந்தியாவினுள் வந்து அங்கிருந்த மிக பண்டைக் காலந்தொட்டு வழங்கிவரும் உயரிய திராவிடர் நாகரிகத்தையறிந்து கற்றனர் என்று எச். சி. வெல்சு என்ற ஆங்கில உலக வரலாற்றாசிரி யர் கூறுகிறார்.(1)

---

(1) Aryan peoples, speaking Sanskrit, had Come down through the western passes into North India long before 1000. B. C. There they came into contact with a Primordial brunet Civilization, the Dravidian Civilization, and learned much from it. (A Short History of the World. Ch XIV By. H G. Wells)

தமிழர் அறநெறி வாழ்வில் மாசு கலக்க முற்படுவதைத் தடுக்க வள்ளுவச் சான்றோர் தம் புரட்சி இலக்கியமான திருக்குறளை உருவாக்கினர்.

ஆரியர் பழக்கங்கள் தமிழப் பண்பாடுகளைத் தாக்கும் நிலை தமிழக வரலாற்றில் பெருங்கிளர்ச்சியை மூட்டிய நிலை. அப்போது குழப்பம் மிக்க குழுகாயச் சூழல் அமைந்திருக்கும். அந்நிலையில் அல்லநிலை கடிந்து நல்ல நிலைகாட்டிய வல்லவரே வள்ளுவச் சொல்லரசர்! ஆரிய நூல்கள், நம்பிக்கைகள், மடமைகள், போலிப் பழக்கங்கள், ஒழுக்கக் கேடுகள், கற்பழிவுகள், தீமைகள், கயமைகள், சூது, களவு, தீக்காமம், அச்சம், நெறிகோடியவெறி, வரைவின் மகளிர் தொடர்பு, கொடுமை, ஆகாச்செயல்கள் அனைத்தையும் கடிகிறார் வள்ளுவர்.

குறளிலுள்ள 'கயமை' என்ற பகுதி ஆரியரை-அவர் தம் இழுக்கைக்-கண்டிக்கவே யாக்கப்பெற்றது என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

"மக்கள் போன்றே கயவர் தோன்றினாலும் மக்கள் தன்மை இல்லாமையால் அவர் மக்கள் ஆகார். இவர்களுக்கு இணைகூறக் கூடிய இழிந்தோர் எவருமிலர்!

நெஞ்சில் கவலையில்லாமல் கயமை புரிந்து நன்மை பெறுபவர் கயவர். தம் விருப்பம்போல் கயமை செய்பவர் தேவர். அவரைப் போன்று கயவர் தீமை புரிபவர். இத்தகு நெறியர் ஆரியரே.

கீழோர் அச்சமே உடையவர்; பொருளாவலால் நல்லோர்போல் நடிப்பார். மறைச் செய்திகளைப் பறைபோலத் தாமே ஏந்திச்சென்று பரப்புவர் கயவர் (நாரதரை நினைக்க.) தாமே விரும்பி ஒருபொருளை ஈயாத சுருக்காளர்; ஈரக்கையைக்கூட உதராத அவ்வளவு வள்ளல்கள் கயவர்! தமிழ்ச்சான்றோர் பிறர் கூறும் குறைகேட்டு உடனே பயன் உண்டாக்குவர். கயவரோ, துன்புறுத்தினால் ஓரளவு பயன் தருவர்! மற்றவர் உழைத்துப் பொருளீட்டி உடுத்து நன்றாக உண்டு வாழ்வதைக்கண்டு மனம் பொறார் ஆரியர். அன்னார்மீது குற்றம் உண்டாக்கவும் முயல்வார். இவர்கள் நெருக்கடியில் பேணத்தக்க ஒழுக்கத்தையும், உயிரினுஞ் சீரிய கற்பையும், உயிரினும் ஒப்பற்ற மானத்தையும் கூட இழக்கப் பின்வாங்கார். எதையும் விற்றற்கு விரைவர்! (குறள்: 1071-1080)"

'புராணம்' 'இதிகாசம்' வடமொழிக்கதை, பாவியங்களில் வரும் பலர் வரலாறுகள் 'கயமை'யில் காணப்படும் குற்றங்களால் உருவாக்கப்பட்டுள்ளமையை எண்ணினுல், வள்ளுவர் யாரை உள்ளத்திற் கொண்டு அப் பத்துப் பாக்களேயும் பாடியிருப்பார் என்பதை நன்கறியலாம்.

'தனக்குத் துன்பம் வரும்போது பிறர்க்குக் கேடு சூழலாம்' என்பது ஆரியக் கோட்பாடு. இன்னு செய்தார்க்கும் இனியவே செய்தல் சால்பு என்பது வள்ளுவர் தெள்ளமிழ்தம்.

புறத்திணைப் போர் அறநெறிக்குட்பட்டது. 'ஆரியக்கடவுளரே' (?) நேர்மையாகப்போர் புரிந்ததில்லே!! வள்ளுவரின் படைமாட்சியின் சிறப்புக்கீடாக எந்த ஆரிய 'மறமரபும்' நிற்காது!

இல்லறத்திற்கீடாக எதனேயும் ஏலாதவர் வள்ளுவர். குறள் கூறும் துறவறம் காடு-மலே தேடியோடும் கீழ்மைப் பேய்மைத் துறவன்று. இல்லறம் நடாத்தித் தெளிவுபெற்று உலகுக்காக நல்லறம் புரியும் அகத்துறவு; மெய்த்துறவு; தன்னலம் பேணுப் பிறர் நலநெறி. ஆரியநெறி கயமை, இரண்டகம், ஏமாற்று, போலிமை, பொய்மை, கூடாவொழுக்கம், இருமனப்போக்கு ஆகியவற்றை மேற்கொண்டது. வள்ளுவர் இவற்றைக் கனவிலும் காணுதது; ஏலாதது!!

தன்னுழைப்பால் இல்லம் கட்டி, உணவைப் பகுத்துண்டு வாழ்வதே இன்ப வாழ்வு என்றும், தன் தலேவியோடு கூடி முயங்கிப்பெறும்இன்பமே மெய்யின்பம் என்றும் உலகஅறம்கூறுவார்

''தம் இல் இருந்து தமது பாத்து உண்டற்ருல்
அம்மா அரிவை முயக்கு,'' (1107) என்ற குறள் நாகரிகம் வேதம் அறியாத தனிச்சால்புடையது. பெண், பெண்ணின்பம், பெண்மை முதன்மை இவற்றை விரும்பாத நெறி வடவர்நெறி. பெண்ணே குற்றத்தின் வடிவம்; மாயப்பேய்; பெண்ணறிவுபிழைபட்டது; பெண் காமவின்பம் அளறில் வீழ்த்தும் என்ற கதைப்பு ஆரியத்திற்குரியது! அதனுற்ருனே களவுக் காதலின் அருமையையும், இல்லற வாழ்வின் பெருமையையும், அறத்தொடுநிற்றலின் சால்பையும் விளக்கிக் 'குறிஞ்சிப்பாட்டை'க் கபிலர் யாத்து

வடமொழியாளர்க்குத் தமிழ ஒழுகலாற்றை அறிவுறுத்தினர்! களவு-கற்பு-நெறியை, ஐந்திணைமரபை வள்ளுவ அந்தணர் இரு நூற்றைம்பது குறட்பேரிலக்கியங்களால் நனிவிரிவாகப் பாடியுள்ளாரே! மக்கள் செல்வம் வள்ளுவர் உள்ளத்தை அள்ளியதாயிற்றே! மனைவி என்று கூடக் கூற விரும்பாமல் 'வாழ்க்கைத் துணை நலம்' என்றல்லவா பெண்ணைப்போற்றினர்குறட்பேரறிஞர்!

'மலரினும் மெல்லிது காமம்' என்று காமநுட்பம் தமிழரே அறிவர் என்று பெருமித முழக்கமிட்டார். சிலர் அதன் செவ்வி தெளிவார்; ஆகவே பிறர் அறியார் என்றனரே!

மந்தை மந்தையாகப் பெண்ணை மணக்கும் ஆரியப்பழக்கம் (தயரதன், கண்ணன் போன்றோர்) வள்ளுவர் உடன்படாதது. மனைவிக்கு அடிமையாதலையும் வன்மையாகக்கண்டித்துப் 'பெண்வழிச்சேறலை'ப் பாடிய குறள் நல்லவர் கூற்று வியக்கத்தக்கதன்றோ!

ஆரியநெறியும், தமிழநெறியும் (குறள் நெறி) இவ்வாறு கோடிக்கணக்கான முரண்பாடுகளையுடையது என்பதைத் தெளிந்தால் தமிழப் பண்பாட்டின் உயர்வு தெள்ளிதிற்புலனாகும்.

இப் பிறப்பிலேயே மனைவியைப் பிரிந்து தவம் செய்யப் போகும் வடநெறியின் மருளோடு, பிறவிகள் இருக்குமாயின், பிறவிகள்தோறும் தலைவனையே தலைவி அடைய விரும்புவதும், தலைவியையே தலைவன் அடைய விரும்புவதுமான உயர்அற நாகரிகத்தை ஒப்பிட்டால் தமிழர் பண்பாட்டின் ஒட்பம் தெரியும்

''இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர் கொண்டனள்.'' (1315) என்ற ஓவியப் பாட்டில் தமிழுள்ளம் காட்டினர்.

"ஒரு காதலன் மிக்க காதலுணர்வால்தான் காதலியிடம், இப்பிறப்பில் யாம் பிரியமாட்டோம்" என்று கூறினன். அச்சொல்லால், "இனிவரும் பிறப்புகளில் (இருக்குமாயின்) அப்போது பிரிவோம்" என்ற குறிப்புளதே என்று கருதிக் கண்ணிறையக் கண்ணீர் சிந்தி அழுதாளாம் தலைவி!'—இந் நாகரிக உயிரன்புக் காதலுக்கு வடவர் காதல் (?) இணையாகுமா?

எந்தக் கயமை வழியையும் கைக்கொண்டு வரி வாங்குவது ஆரியவழக்கு வள்ளுவரோ அதனை முற்றும் கண்டிக்கிறார்.

"வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு." (552) என்றார். "நடுவழிப் பறிக் கள்ளன் வேலைக் காட்டிக் கொள்ளையடிப்பதைப் போன்றதே கையிற் செங்கோலைத்தூக்கியிருந்தும் குடிமக்களை வாட்டி வருததி வரிப்பொருளைப் பெறுதல்" என்ற குறள் ஒழுங்குக்கு இணையுண்டா?

ஆரியத் தீமையை அழிக்கவந்த அறமறை திருக்குறளாம். தமிழச் சால்பைத் தமிழறநெறியை வாழ்த்த வளர்ந்த அறிவுச் சுடர் திருக்குறளாம். குறளின் நோக்கத்தைக் குலைக்கும் இடைக் கால இருள் இழிந்தது. தமிழர் குறள்முறையை நுணுகியறிந்து தெளிவுபெற்றுத் தமிழினத்தார் முன்னைத் தமிழர் நல்லறவாழ்வை இன்று புதுப்பித்தோம்ப வேண்டும்.

சமயச்சிறை, இன-குல-நிற-நம்பிக்கைப் பேதங்கள், ஆகிய வற்றைக் கடந்த பொதுமறை தமிழ்மறையே. இதனை இருட் சேற்றில் தள்ளக் கருதுவது அறியாமையே

கதைகள், அச்சங்கள், மூடநம்பிக்கைகள், மடமைகள், கயமைகள், வீண் செலவுகள், ஆரவாரங்கள், ஒழுக்கக்கேடுகள் ஆகியவற்றைப் பெரிதும் குமுகாயத்தில் மிகச்செய்த ஆர்ப் பாட்ட வெறி சான்ற ஆரிய வேதநெறி, வடக்குச் சழக்கு வீழ வேண்டும் வீழ்த்தப்படவேண்டுமென்பதற்கென்றே தோன்றிய மறுமலர்ச்சிப் புரட்சிப் பேரிலக்கியம் திருக்குறளாகும். உலகச் சீர்திருத்தக் கலைநூல் அது. பகுத்தறிவுப் பண்பையும், உணர்வுப் பண்பாட்டையும் விளக்கும் ஒழுக்க இலக்கணம் குறள்! வாழ்க்கை இலக்கியமாய், உலகப் பெருங்கணக்காய். சான்றோர் படைக்கலனாய், புலவோர் சீராய்ச், செந்நெறி காட்டும் புரட்சிப் பேரிலக்கியமான திருக்குறள் ஓதாதவன் பிணம்; குறள் இல்லாத இல்லம் சுடுகாடு! குறள் ஓங்குக தனி வாழ்விலும் பொது வாழ்வி லும் சிறக்கவேண்டும்! மக்கட்டன்மை மாநிலத்தில் புத்துயிர் பெற வேண்டும். O

(முன்னிதழ்த்தொடர்ச்சி) த. சலாவுத்தீன், அறி. இ; ஆ. ப.

உயிர்க்கொல்லிகள் (ANIBIOTIES)

புளோரியும் செய்னும் பிளமிங்கின் ஆய்வுகளை மீண்டும் மீண்டும் செய்தனர். ஆய்வுச்சாலையில் 50 பெரிய எலிகளுக்கு நோய் நுண்ணுயிரிகளை ஊசியின்மூலம் செலுத்தினர். இதில் 25 எலிகளுக்குப் பூஞ்சணியம் செலுத்தப்பட்டது. மற்ற 25 எலிகளை அப்படியே விட்டுவிட்டனர். அடுத்தநாள் காலை பார்த்ததில் பூஞ்சணியம் செலுத்தப்படாத 25 எலிகளும் இறந்து கிடந்தன. ஆனால் பூஞ்சணியம் செலுத்தப்பட்ட 25 எலிகள் உயிருடன் இருந்தன. இவ்வாறு பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு முறையும் பூஞ்சணியம் நோய் நுண்ணுயிரிகளைக் கொன்று நோயைக் குணப்படுத்தியது.

இதன்பிறகு பூஞ்சணியச் சாற்றை மிகுந்த அளவில் செய்ய முனைந்தனர். பிப்ரவரி 1941இல் இரண்டாண்டுகள் இடர்ப்பட்டு ஒரு தேக்கரண்டி அளவு மிகவும் தூய்மையான பூஞ்சணியப் படிகங்களை உண்டாக்கினர். இ∴து ஒரு நோயாளிக்குத்தான் போதுமானது. ஆ∴சுபோர்டைச் சேர்ந்த ஊர்க்காவலன் மழிக்கும்போது முகத்தில் ஏற்பட்ட காயத்தின்மூலம் நோய் நுண்ணுயிரிகள் அவன் குருதி ஓட்டத்தில் கலந்ததால் அவன் உடல் முழுவதும் ஒரு தொற்று நோயால் பற்றப்பட்டுத் தொல்லைக்குள்ளானான். மருத்துவர்களால் ஒன்றும் செய்ய முடியாதநிலை. இன்னும் மிகச் சிலநாட்கள்தான் அவன் உயிர் வாழ்வான். இந்நிலையில் புளோரி பூஞ்சணியத்தைச் செலுத்தலாம் என்ற முடிவிற்கு வந்தார். மூன்று மணிகளுக்கு ஒருமுறை ஒரு குறிப்பிட்டளவு பூஞ்சணியத்தை ஊர்க்காவலனின் உடலில் செலுத்தினர். 12 மணி நேரத்தில் அவன் உடல்நிலை சிறிது சரியானது. அடுத்த நாள் இன்னும் முன்னேற்றம். ஒரு கிழமைக்குப் பூஞ்சணியத்தைச் செலுத்தினால் அவன் நலமடைவான்என்று மருத்துவர்கள் கணக்கிட்டனர். ஆனால் திரட்டப்பட்டப்பூஞ்சணியம் செலவாகிவிட்டது! நோயாளி சில நாட்கள் கூடவாழ்ந்து இறந்து போனான். தங்களால் ஒரு நோயாளியைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே என்று புளோரியும் செய்னும் மிகவும் மனம் வருந்தினர். பூஞ்சணியம் தகுந்தளவு இருந்திருந்தால் அவனைக் காப்பாற்றியிருக்கலாம். இதன் பிறகு பல முறை நோயாளிகள் நோயின் பிடியிலிருந்து தப்புவதற்கு முன் பூஞ்சணியம் இல்லாமல் போய்விட்டது இறுதியில் 1941 மே-மாதத்தில் பூஞ்சணியத்தால் ஓர் உயிர் காப்பாற்றப்பட்டது. நாற்பத்தெட்டு

அகவை அடைந்த ஒருவன் 'இசுடாப்' நுண்ணுயிரிகளால் தாக்கப் பட்டு நோய்வாய்ப்பட்டான். அவனுக்கு ஏழு நாட்கள் பூஞ்சணியம் செலுத்தப்பட்டது. அவன் நோயினின்று முழுதும் காப்பாற்றப்பட்டான்.

மேற்செய்த ஆராய்ச்சிகளிலிருந்து பூஞ்சணியம் மாந்தர்களுக்குப் பெரிதும் பயன்படும் ஒரு மருந்து என்பது தெளிவானது. ஆனால் அது மிகுந்த அளவில் கிடைக்கவில்லை. ஒரு நோயாளிக்கு ஒரு நாளுக்குவேண்டிய பூஞ்சணியத்தைப்பெற 40 குடுவை (காலன்) பூஞ் சணியச்சாறு வேண்டியிருந்தது. புளோரி அமேரிக்க வேளாண்மைக கழகத்தினரிடம் கேட்டுக் கொண்டதின் பேரில் பல பூஞ்சணங்கள் ஆராயப்பட்டன. பல முறைகளின் மூலம் பூஞ்சணியம் உண்டாக்க ஆராய்ச்சிகள் நடத்தப்பெற்றன. இவ்வாறு ஓர் ஆண்டு இடைவிடாமல் ஆராய்ச்சி செய்தும் பயன் ஏதும் கிடைக்கவில்லை.

இந்நேரத்தில் இரண்டாம் உலகப் பெரும்போர் தொடங்கியது. அப்பொழுது போரில் அடிபடும் மறவர்களுக்குப் பூஞ்சணியம் தேவைப் பட்டது. ஆகையால் பெருமளவில் ஆராய்ச்சி நடந்தது. சனவரி 1943-இல் இரண்டு "அவுன்சு"கள் திரட்டப்பட்டது. செப்டம்பரில் இரண்டு "பவுண்டு" திரட்டப்பட்டது. 1945-இல் 1000 "பவுண்டு" பூஞ்சணியம் ஒரே திங்களில் திரட்டப்பட்டது. மிகுதியான பூஞ்சணியம் கிடைக்கக்கிடைக்கப் பல வகையான நோய்களுக்கும் அது பயன் படுத்தப்பட்டது.

1958-இல் வேதியலார் பூஞ்சணிய மூலக்கூற்றமைப்பைத்தெரிந்து கொண்டபின், அதன் உள்ளுள்ள அணுக்களின் அமைப்பை மாற்றிப் பல புதிய பூஞ்சணிய வகைகளை உண்டாக்கினர்.

பூஞ்சணியம் வேலைசெய்யும் வகை: வளருகின்ற நோய் நுண்ணுயிரிகளைப் பூஞ்சணியம் வளரவிடாமல் தடுக்கின்றது. நோய் நுண்ணுயிரிகள் வளராமல் அவற்றைப் பூஞ்சணியம் ஒன்றும் செய்வதில்லை. நோய் நுண்ணுயிரி உயிர்மங்கள் (Cells) உண்டாக்க உதவும் பொருள்கள் பூஞ்சணியத்தின் முன்னே திறனற்றுப் போய்ப் புதிய உயிர்மங்கள் உண்டாவதில்லை.

நோய் நுண்ணுயிரிகள்: இந் நுண்ணுயிரிகள் ஓர் உயிர்ம நிலைத் திணைகள் (Single cell). இவை உயிர்மச்சுவரால் சூழப்பட்டிருக்கும்.

பூஞ்சணியம் இச்சுற்றுச்சுவர் உண்டாகாமல் இருக்கச் செய்கின்றது. பூஞ்சணியம் செலுத்தப்பட்டவுடன் இச்சுவர் கட்டுவதற்காகப் பயன் படுததப்படும் பொருள்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இச்சுவரில்லாமல் புதிய நோய் நுண்ணுயிரி உண் டாகாது. பூஞ்சணியம் நம் உடலிலுள்ள மற்ற திசுக்களைத் தாக்குவ தில்லை. இவ்வாறு பூஞ்சணியம் பல வகையான நோய்களுக்குப் பயன் படுத்தும் மருந்தாக மருத்துவர்களால் உலகெங்கும் பயன்படுத்தப்படு கின்றது.

சிலருக்குப் பூஞ்சணியத்தைப் பயன்படுத்தினால் 'ஒத்துக்கொள் ளாத நிலை' (Allergic) ஏற்பட்டுப் பல புதிய எதிர்வினைகள் (Reac-tions)உண்டாகின்றன. நோய் நலமாவதும் இல்லை. மேலும் பூஞ்சணி யத்தின் தாக்குதலுக்கு எதிர்நின்று வளரும் நோய் நுண்ணுயிரிகள் பல இக்கால் உண்டாகிவிட்டன இவை பூஞ்சணியத்தால் தாக்கப்படுவ தில்லை இவ்வகை நோய் நுண்ணுயிரிகளைத் தாக்குவதற்காக, 'இசுடிரெப்டோமைசின்' (Sheptomycin), 'குளோரோ மைசிடின்' (Chloromycetic), 'ஆரியோ மைசின்' (Aureomycin), 'டெர்ரா மைசின்' (Terramycin) என்ற புதிய ஊசி மருந்துகள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. இன்னும் பழைய உயிர்க்கொல்லிகளால் தாக்கமுடியாத நோய் நுண்ணுயிரிகளைத் தாக்கும் உயிர்க்கொல்லிகள், ஒத்துக்கொள் ளாத நிலையை உண்டாக்காத உயிர்க்கொல்லிகள், வாயின் மூலம் உட் கொள்ளும் உயிர்க்கொல்லிகள், செயற்கை உயிர்க்கொல்லிகள் (Syn-thetic antibiotics), கூட்டு உயிர்க்கொல்லிகள், என்று நோய்நுண் ணுயிரிகளைக் கொல்ல பல வகையான திறன்வாய்ந்த உயிர்க்கொல்லி கள் இப்பொழுது நடைமுறையில் பயன்படுத்தப் படுகின்றன.

புதிய புதிய உயிர்க்கொல்லிகளையும் மருந்துகளையும் கண்டு பிடித்த வண்ணமே அறிவியலார்கள் இருக்கின்றார்கள். சில நோய் நுண்ணுயிரிகள் இவற்றின் தாக்குதலுக்கு எதிர்ப்பைத் தங்களுள் உண்டாக்கிக் கொண்டே இருக்கின்றன. இருந்தாலும் மாந்தர்களின் எதிரியான நோய் நுண்ணுயிரிகளை எதிர்த்து வெற்றிபெறப் புதிய முறைகளை ஆராய்ச்சியாளர்கள் ஆக்கிக்கொண்டே இருக்கின்றார்கள்.

உறுப்பினர்களுக்கு......

முகவரி மாற்றம் வேண்டும் உறுப்பினர்கள் தங்கள் பழைய முக வரிகளையும் தெளிவாக எழுதுவதுடன் தம் உறுப்பினர் எண்களையும் தவறாமல் குறிப்பிடுதல் வேண்டும்.

முறையில் தமிழ் அகரவரிசை, மெய்வரிசை முறையில் வடமொழி எழுத்துகள் அமைந்தன.

மொழி நூலோர் உலக மொழிகளுக்கு முதல் வேராகத் தமிழே விளங்கிற்று என்று நிலைநாட்டியுள்ளனர். உலகின் வடமுனையிலுள்ள காமச் சட் கா (Kamatchatka) என்ற உருசியப் பகுதியில் பேசப் படும் மொழி தமிழை ஒட்டியதென்று, வரலாற்றறிஞர் அண்டர் (Sir. Hunter) கூறுவர்.

இத்தாலி, இடசுக்கானி பகுதியில் பேசும் மொழி தமிழின் திரிபாம். ஐரோப்பாவின் மேற் பாகத்திலுள்ள ஐபீரியா நாட்டின் (Spain) பிரனிசு மலையடி வாரத்திற் குடியேறியுள்ள 'பாசுக்கு' (Basques) இனத்தார் திராவிட மொழியின் தொன் மொழியைப் பேசுகின்றனர். தமிழிலுள்ள ஐந்து குறில்களே இலத்தீன் மொழியில் ஐந்து இலக்கணப் பிரிவுகளாக அமைந்துள்ளன.

இந்திய மொழிகள் அனைத்திற்கும் அன்னையாகவும், பாட்டியாக்வும் அமைந்தது தனித்தமிழே. ஆகவே உலகமொழிகளில் தமிழின் நடை, எழுத்து, முறை, மரபு, ஒலி, இலக்கணம், கூட்டு, கொள்கை, நெறி, ஒழுகலாறு, வரையறை, நெடுங்கணக்கு, எண்ணக்கூறு, அமைப்பு ஆகியவை ஊடுருவியுள்ளன என்பது அறிவுலகத்தீர்ப்பாம். குறளின் எண்ணம், மரபு உலக இலக்கியங்களை ஊடுருவியதற்குரிய வாய்ப்பு இதனால் தெற்றென விளங்கும். தமிழறமே உலக அறமாகக் கிளைத்துப் படர்ந்துள்ளது என்பது உண்மையே.

ஆரியர் இந்தியாவினுள் வந்து அங்கிருந்த மிக பண்டைக் காலந்தொட்டு வழங்கிவரும் உயரிய திராவிடர் நாகரிகத்தையறிந்து கற்றனர் என்று எச். சி. வெல்சு என்ற ஆங்கில உலக வரலாற்றாசிரியர் கூறுகிறார்.(1)

(1) Aryan peoples, speaking Sanskrit, had Come down through the western passes into North India long before 1000. B. C. There they came into contact with a Primordial brunet Civilization, the Dravidian Civilization, and learned much from it. (A Short History of the World. Ch. XIV By. H G. Wells)

தமிழர் அறநெறி வாழ்வில் மாசு கலக்க முற்படுவதைத் தடுக்க வள்ளுவச் சான்றோர் தம் புரட்சி இலக்கியமான திருக்குறளை உருவாக்கினர்.

"ஆரியர் பழக்கங்கள் தமிழப் பண்பாடுகளைத் தாக்கும் நிலை தமிழக வரலாற்றில் பெருங்கிளர்ச்சியை மூட்டிய நிலை. அப்போது குழப்பம் மிக்க குமுகாயச் சூழல் அமைந்திருக்கும். அந்நிலையில் அல்ல நிலை கடிந்து நல்ல நிலைகாட்டிய வல்லவரே வள்ளுவச் சொல்லரசர்! ஆரிய நூல்கள், நம்பிக்கைகள், மடமைகள், போலிப் பழக்கங்கள், ஒழுக்கக் கேடுகள், கற்பழிவுகள், தீமைகள், கயமைகள், சூது, களவு, தீக்காமம், அச்சம், நெறிகோடியவெறி, வரைவின் மகளிர் தொடர்பு, கொடுமை, ஆகாச்செயல்கள் அனைத்தையும் கடிகிறார் வள்ளுவர்.

குறளிலுள்ள 'கயமை' என்ற பகுதி ஆரியரை-அவர் தம் இழுக்கைக்-கண்டிக்கவே யாக்கப்பெற்றது என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

"மக்கள் போன்றே கயவர் தோன்றினும் மக்கள் தன்மை இல்லாமையால் அவர் மக்கள் ஆகார். இவர்களுக்கு இணை கூறக் கூடிய இழிந்தோர் எவருமிலர்!

நெஞ்சில் கவலையில்லாமல் கயமை புரிந்து நன்மை பெறுபவர் கயவர். தம் விருப்பம்போல் கயமை செய்பவர் தேவர். அவரைப் போன்று கயவர் தீமை புரிபவர். இத்தகு நெறியர் ஆரியரே.

கீழோர் அச்சமே உடையவர்; பொருளாவலால் நல்லோர்போல் நடிப்பார். மறைச் செய்திகளைப் பறைபோலத் தாமே ஏந்திச்சென்று பரப்புவர் கயவர் (நாரதரை நினைக்க.) தாமே விரும்பி ஒருபொருளை ஈயாத சுருக்காளர்; ஈரக்கையைக்கூட உதறாத அவ்வளவு வள்ளல்கள் கயவர்! தமிழ்ச்சான்றோர் பிறர் கூறும் குறைகேட்டு உடனே பயன் உண்டாக்குவர். கயவரோ, துன்புறுத்தினால் ஓரளவு பயன் தருவர்! மற்றவர் உழைத்துப் பொருளீட்டி உடுத்து நன்றாக உண்டு வாழ்வதைக்கண்டு மனம் பொறார் ஆரியர். அன்னார்மீது குற்றம் உண்டாக்கவும் முயல்வார். இவர்கள் நெருக்கடியில் பேணத்தக்க ஒழுக்கத்தையும், உயிரினுஞ் சீரிய கற்பையும், உயிரினும் ஒப்பற்ற மானத்தையும் கூட இழக்கப் பின்வாங்கார். எதையும் விற்றற்கு விரைவர்! (குறள்: 1071-1080)"

'புராணம்' 'இதிகாசம்' வடமொழிக்கதை, பாவியங்களில் வரும் பலர் வரலாறுகள் 'கயமை'யில் காணப்படும் குற்றங்களால் உருவாக்கப்பட்டுள்ளமையை எண்ணினுல், வள்ளுவர் யாரை உள்ளத்திற் கொண்டு அப் பத்துப் பாக்களையும் பாடியிருப்பார் என்பதை நன்கறியலாம்.

'தனக்குத் துன்பம் வரும்போது பிறர்க்குக் கேடு சூழலாம்' என்பது ஆரியக் கோட்பாடு. இன்னு செய்தார்க்கும் இனியவே செய்தல் சால்பு என்பது வள்ளுவர் தெள்ளமிழ்தம்.

புறத்திணைப் போர் அறநெறிக்குட்பட்டது. 'ஆரியக்கடவுளரே' (?) நேர்மையாகப் போர் புரிந்ததில்லை!! வள்ளுவரின் படைமாட்சியின் சிறப்புக்கீடாக எந்த ஆரிய 'மறமரபும்' நிற்காது!

இல்லறத்திற்கீடாக எதனையும் ஏலாதவர் வள்ளுவர். குறள் கூறும் துறவறம் காடு-மலை தேடியோடும் கீழ்மைப் பேய்மைத் துறவன்று. இல்லறம் நடாத்தித் தெளிவுபெற்று உலகுக்காக நல்லறம் புரியும் அகத்துறவு; மெய்த்துறவு; தன்னலம் பேணுப் பிறர் நலநெறி. ஆரியநெறி கயமை, இரண்டகம், ஏமாற்று, போலிமை, பொய்மை, கூடாவொழுக்கம், இருமனப்போக்கு ஆகியவற்றை மேற்கொண்டது. வள்ளுவர் இவற்றைக் கனவிலும் காணுதது; ஏலாதது!!

தன்னுழைப்பால் இல்லம் கட்டி, உணவைப் பகுத்துண்டு வாழ்வதே இன்ப வாழ்வு என்றும், தன் தலைவியோடு கூடி முயங்கிப்பெறும்இன்பமே மெய்யின்பம் என்றும் உலகஅறம்கூறுவார்

''தம் இல் இருந்து தமது பாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு,'' (1107) என்ற குறள் நாகரிகம் வேதம் அறியாத தனிச்சால்புடையது. பெண், பெண்ணின்பம், பெண்மை முதன்மை இவற்றை விரும்பாத நெறி வடவர்நெறி. பெண்ணே குற்றத்தின் வடிவம்; மாயப்பேய்; பெண்ணறிவுபிழைபட்டது; பெண் காமவின்பம் அளறில் வீழ்த்தும் என்ற கதைப்பு ஆரியத்திற்குரியது! அதனுற்றுனே களவுக் காதலின் அருமையையும், இல்லற வாழ்வின் பெருமையையும், அறத்தொடுநிற்றலின் சால்பையும் விளக்கிக் 'குறிஞ்சிப்பாட்டை'க் கபிலர் யாத்து

வடமொழியாளர்க்குத் தமிழ ஒழுகலாற்றை அறிவுறுத்தினர்! களவு-கற்பு-நெறியை, ஐந்திணைமரபை வள்ளுவ அந்தணர் இரு நூற்றைம்பது குறட்பேரிலக்கியங்களால் நனிவிரிவாகப் பாடியுள்ளாரே! மக்கள் செல்வம் வள்ளுவர் உள்ளத்தை அள்ளியதாயிற்றே! மனைவி என்று கூடக் கூற விரும்பாமல் 'வாழ்க்கைத் துணை நலம்' என்றல்லவா பெண்ணைப்போற்றினர்குறட்பேரறிஞர்!

'மலரினும் மெல்லிது காமம்' என்று காமநுட்பம் தமிழரே அறிவர் என்று பெருமித முழக்கமிட்டார். சிலர் அதன் செவ்வி தெளிவார்; ஆகவே பிறர் அறியார் என்றனரே!

மந்தை மந்தையாகப் பெண்ணை மணக்கும் ஆரியப்பழக்கம் (தயரதன், கண்ணன் போன்றோர்) வள்ளுவர் உடன்படாதது. மனைவிக்கு அடிமையாதலையும் வன்மையாகக்கண்டித்துப் 'பெண் வழிச்சேறலை'ப் பாடிய குறள் நல்லவர் கூற்று வியக்கத்தக்கதன்றோ!

ஆரியநெறியும், தமிழநெறியும் (குறள் நெறி) இவ்வாறு கோடிக்கணக்கான முரண்பாடுகளையுடையது என்பதைத் தெளிந்தால் தமிழப் பண்பாட்டின் உயர்வு தெள்ளிதிற்புலனாகும்.

இப் பிறப்பிலேயே மனைவியைப் பிரிந்து தவம் செய்யப் போகும் வடநெறியின் மருளோடு, பிறவிகள் இருக்குமாயின், பிறவிகள்தோறும் தலைவனையே தலைவி அடைய விரும்புவதும், தலைவியையே தலைவன் அடைய விரும்புவதுமான உயர்அற நாகரிகத்தை ஒப்பிட்டால் தமிழர் பண்பாட்டின் ஒட்பம் தெரியும்

''இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனக்
கண்நிறை நீர் கொண்டனள்.'' (1315) என்ற ஓவியப் பாட்டில் தமிழுள்ளம் காட்டினர்.

''ஒரு காதலன் மிக்க காதலுணர்வால்தான் காதலியிடம், இப்பிறப்பில் யாம் பிரியமாட்டோம்'' என்று கூறினன். அச் சொல்லால், ''இனிவரும் பிறப்புகளில் (இருக்குமாயின்) அப்போது பிரிவோம்'' என்ற குறிப்புளதே என்று கருதிக் கண்ணிறையக் கண்ணீர் சிந்தி அழுதாளாம் தலைவி!'—இந் நாகரிக உயிரன்புக் காதலுக்கு வடவர் காதல் (?) இணையாகுமா?

எந்தக் கயமை வழியையும் கைக்கொண்டு வரி வாங்குவது ஆரியவழக்கு. வள்ளுவரோ அதனை முற்றும் கண்டிக்கிறார்.

"வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு." (552) என்றார். "நடுவழிப் பறிக் கள்ளன் வேலைக் காட்டிக் கொள்ளையடிப்பதைப் போன்றதே கையிற் செங்கோலைத்தூக்கியிருந்தும் குடிமக்களை வாட்டி வருத்தி வரிப்பொருளைப் பெறுதல்" என்ற குறள் ஒழுங்குக்கு இணையுண்டா?

ஆரியத் தீமையை அழிக்கவந்த அறமறை திருக்குறளாம். தமிழச் சால்பைத் தமிழறநெறியை வாழ்த்த வளர்ந்த அறிவுச் சுடர் திருக்குறளாம். குறளின் நோக்கத்தைக் குலைக்கும் இடைக் கால இருள் இழிந்தது. தமிழர் குறள்முறையை நுணுகியறிந்து தெளிவுபெற்றுத் தமிழினத்தார் முன்னைத் தமிழர் நல்லறவாழ்வை இன்று புதுப்பித்தோம்ப வேண்டும்.

சமயச்சிறை, இன-குல-நிற-நம்பிக்கைப் பேதங்கள், ஆகிய வற்றைக் கடந்த பொதுமறை தமிழ்மறையே. இதனை இருட் சேற்றில் தள்ளக் கருதுவது அறியாமையே

கதைகள், அச்சங்கள், மூடநம்பிக்கைகள், மடமைகள், கயமைகள், வீண் செலவுகள், ஆரவாரங்கள், ஒழுக்கக்கேடுகள் ஆகியவற்றைப் பெரிதும் குமுகாயத்தில் மிகச்செய்த ஆர்ப் பாட்ட வெறி சான்ற ஆரிய வேதநெறி, வடக்குச் சழக்கு வீழ வேண்டும் வீழ்த்தப்படவேண்டு மென்பதற்கென்றே தோன்றிய மறுமலர்ச்சிப் புரட்சிப் பேரிலக்கியம் திருக்குறளாகும். உலகச் சீர்திருத்தக் கலைநூல் அது. பகுத்தறிவுப் பண்பையும், உணர்வுப் பண்பாட்டையும் விளக்கும் ஒழுக்க இலக்கணம் குறள்! வாழ்க்கை இலக்கியமாய், உலகப் பெருங்கணக்காய், சான்றோர் படைக்கலனாய், புலவோர் சீராய்ச், செந்நெறி காட்டும் புரட்சிப் பேரிலக்கியமான திருக்குறள் ஓதாதவன் பிணம்; குறள் இல்லாத இல்லம் சுடுகாடு! குறள் ஓங்குக தனி வாழ்விலும் பொது வாழ்வி லும் சிறக்கவேண்டும்! மக்கட்டன்மை மாநிலத்தில் புத்துயிர் பெற வேண்டும். ()

(முன்னிதழ்த்தொடர்ச்சி) த. சலாவுத்தீன், அறி. இ; ஆ. ப.

உயிர்க்கொல்லிகள் (ANIBIOTIES)

புளோரியும் செய்னும் பிளமிங்கின் ஆய்வுகளைமீண்டும்மீண்டும்செய்தனர். ஆய்வுச்சாலையில் 50 பெரிய எலிகளுக்கு நோய்நுண்ணுயிரிகளை ஊசியினைமூலம் செலுத்தினர். இதில் 25 எலிகளுக்குப் பூஞ்சணியம் செலுத்தப்பட்டது. மற்ற 25 எலிகளை அப்படியே விட்டுவிட்டனர். அடுத்தநாள் காலை பார்த்ததில் பூஞ்சணியம் செலுத்தப்படாத 25 எலிகளும் இறந்து கிடந்தன. ஆனால் பூஞ்சணியம் செலுத்தப்பட்ட 25 எலிகள் உயிருடன் இருந்தன. இவ்வாறு பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு முறையும் பூஞ்சணியம் நோய் நுண்ணுயிரிகளைக் கொன்று நோயைக் குணப்படுத்தியது.

இதன்பிறகு பூஞ்சணியச் சாற்றை மிகுந்த அளவில் செய்ய -முனைந்தனர். பிப்ரவரி 1941இல் இரண்டாண்டுகள் இடர்ப்பட்டு ஒரு தேக்கரண்டி அளவு மிகவும் தூய்மையான பூஞ்சணியப் படிகங்களை உண்டாக்கினர். இஃது ஒரு நோயாளிக்குத்தான் போதுமானது. ஆக்சுபோர்டைச் சேர்ந்த ஊர்க்காவலன் மழிக்கும்போது முகத்தில் ஏற்பட்ட காயத்தின்மூலம் நோய் நுண்ணுயிரிகள் அவன் குருதி ஓட்டத்தில் கலந்ததால் அவன் உடல் முழுவதும் ஒரு தொற்று நோயால் பற்றப்பட்டுத் தொல்லைக்குள்ளானன். மருத்துவர்களால் ஒன்றும் செய்ய முடியாதநிலை. இன்னும் மிகச் சிலநாட்கள்தான் அவன் உயிர் வாழ்வான். இந்நிலையில் புளோரி பூஞ்சணியத்தைச் செலுத்தலாம் என்ற முடிவிற்கு வந்தார். மூன்று மணிகளுக்கு ஒருமுறை ஒரு குறிப்பிட்டளவு பூஞ்சணியத்தை ஊர்க்காவலனின் உடலில் செலுத்தினர். 12 மணி நேரத்தில் அவன் உடல்நிலை சிறிது சரியானது. அடுத்த நாள் இன்னும் முன்னேற்றம். ஒரு கிழமைக்குப் பூஞ்சணியத்தைச் செலுத்தினல் அவன் நலமடைவான்என்று மருத்துவர்கள் கணக்கிட்டனர். ஆனல் திரட்டப்பட்டபூஞ்சணியம் செலவாகிவிட்டது! நோயாளி சில நாட்கள் கூடவாழ்ந்து இறந்து போனன். தங்களால் ஒரு நோயாளியைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே என்று புளோரியும் செய்னும் மிகவும் மனம் வருந்தினர். பூஞ்சணியம் தகுந்தளவு இருந்திருந்தால் அவனைக் காப்பாற்றியிருக்கலாம். இதன் பிறகு பல முறை நோயாளிகள் நோயின் பிடியிலிருந்து தப்புவதற்கு முன் பூஞ்சணியம் இல்லாமல் போய்விட்டது இறுதியில் 1941 மே-மாதத்தில் பூஞ்சணியத்தால் ஓர் உயிர் காப்பாற்றப்பட்டது. நாற்பத்தெட்டு

அகவை அடைந்த ஒருவன் 'இசுடாப்' நுண்ணுயிரிகளால் தாக்கப் பட்டு நோய்வாய்ப்பட்டான். அவனுக்கு ஏழு நாட்கள் பூஞ்சணியம் செலுத்தப்பட்டது. அவன் நோயினின்று முழுதும் காப்பாற்றப்பட் டான்.

மேற்செய்த ஆராய்ச்சிகளிலிருந்து பூஞ்சணியம் மாந்தர்களுக்குப் பெரிதும் பயன்படும் ஒரு மருந்து என்பது தெளிவானது. ஆனால் அது மிகுந்த அளவில் கிடைக்கவில்லை. ஒரு நோயாளிக்கு ஒரு நாளுக்குவேண்டிய பூஞ்சணியத்தைப்பெற 40 குடுவை (காலன்) பூஞ் சணியச்சாறு வேண்டியிருந்தது. புளோரி அமேரிக்க வேளாண்மைக் கழகத்தினரிடம் கேட்டுக் கொண்டதின் பேரில் பல பூஞ்சணங்கள் ஆராயப்பட்டன. பல முறைகளின் மூலம் பூஞ்சணியம் உண்டாக்க ஆராய்ச்சிகள் நடத்தப்பெற்றன. இவ்வாறு ஓர் ஆண்டு இடைவிடா மல் ஆராய்ச்சி செய்தும் பயன் ஏதும் கிடைக்கவில்லை.

இந்நேரத்தில் இரண்டாம் உலகப் பெரும்போர் தொடங்கியது. அப்பொழுது போரில் அடிபடும் மறவர்களுக்குப் பூஞ்சணியம் தேவைப் பட்டது. ஆகையால் பெருமளவில் ஆராய்ச்சி நடந்தது. சனவரி 1943-இல் இரண்டு "அவுன்சு"கள் திரட்டப்பட்டது. செப்டம்பரில் இரண்டு "பவுண்டு" திரட்டப்பட்டது. 1945-இல் 1000 "பவுண்டு' பூஞ்சணியம் ஒரே திங்களில் திரட்டப்பட்டது. மிகுதியான பூஞ்சணி யம் கிடைக்கக்கிடைக்கப் பல வகையான நோய்களுக்கும் அது பயன் படுத்தப்பட்டது.

1958-இல் வேதியலார் பூஞ்சணிய மூலக்கூற்றமைப்பைத்தெரிந்து கொண்டபின், அதன் உள்ளுள்ள அணுக்களின் அமைப்பை மாற்றிப் பல புதிய பூஞ்சணிய வகைகளை உண்டாக்கினர்.

பூஞ்சணியம் வேலைசெய்யும் வகை: வளருகின்ற நோய் நுண்ணு யிரிகளைப் பூஞ்சணியம் வளரவிடாமல் தடுக்கின்றது. நோய் நுண்ணு யிரிகள் வளராமல் அவற்றைப் பூஞ்சணியம் ஒன்றும் செய்வதில்லை. நோய் நுண்ணுயிரி உயிர்மங்கள் (Cells) உண்டாக்க உதவும் பொருள்கள் பூஞ்சணியத்தின் முன்னே திறனற்றுப் போய்ப் புதிய உயிர்மங்கள் உண்டாவதில்லை.

நோய் நுண்ணுயிரிகள்: இந் நுண்ணுயிரிகள் ஓர் உயிர்ம நிலைத் திணைகள் (Single cell). இவை உயிர்மச்சுவரால் சூழப்பட்டிருக்கும்.

பூஞ்சணியம் இச்சுற்றுச்சுவர் உண்டாகாமல் இருக்கச் செய்கின்றது. பூஞ்சணியம் செலுத்தப்பட்டவுடன் இச்சுவர் கட்டுவதற்காகப் பயன் படுததப்படும் பொருள்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இச்சுவரில்லாமல் புதிய நோய் நுண்ணுயிரி உண் டாகாது. பூஞ்சணியம் நம் உடலிலுள்ள மற்ற திசுக்களைத் தாக்குவ தில்லை. இவ்வாறு பூஞ்சணியம் பல வகையான நோய்களுக்குப் பயன் படுத்தும் மருந்தாக மருத்துவர்களால் உலகெங்கும் பயன்படுத்தப்படு கின்றது.

சிலருக்குப் பூஞ்சணியத்தைப் பயன்படுத்தினால் 'ஒத்துக்கொள் ளாத நிலை' (Allergic) ஏற்பட்டுப் பல புதிய எதிர்விளைகள் (Reactions)உண்டாகின்றன. நோய் நலமாவதும் இல்லை. மேலும் பூஞ்சணி யத்தின் தாக்குதலுக்கு எதிர்நின்று வளரும் நோய் நுண்ணுயிரிகள் பல இக்கால் உண்டாகிவிட்டன இவை பூஞ்சணியத்தால் தாக்கப்படுவ தில்லை இவ்வகை நோய் நுண்ணுயிரிகளைத் தாக்குவதற்காக, 'இசுடிரெப்டோமைசின்' (Sheptomycin), 'குளோரோ மைசிடின்' (Chloromycetic), 'ஆரியோ மைசின்' (Aureomycin), 'டெர்ரா மைசின்' (Terramycin) என்ற புதிய ஊசி மருந்துகள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. இன்னும் பழைய உயிர்க்கொல்லிகளால் தாக்கமுடியாத நோய் நுண்ணுயிரிகளைத் தாக்கும் உயிர்க்கொல்லிகள், ஒத்துக்கொள் ளாத நிலையை உண்டாக்காத உயிர்க்கொல்லிகள், வாயின் மூலம் உட் கொள்ளும் உயிர்க்கொல்லிகள், செயற்கை உயிர்க்கொல்லிகள் (Synthetic antibiotics), கூட்டு உயிர்க்கொல்லிகள், என்று நோய்நுண் ணுயிரிகளைக் கொல்ல பல வகையான திறன்வாய்ந்த உயிர்க்கொல்லி கள் இப்பொழுது நடைமுறையில் பயன்படுத்தப் படுகின்றன.

புதிய புதிய உயிர்க்கொல்லிகளையும் மருந்துகளையும் கண்டு பிடித்த வண்ணமே அறிவியலார்கள் இருக்கின்றார்கள். சில நோய் நுண்ணுயிரிகள் இவற்றின் தாக்குதலுக்கு எதிர்ப்பைத் தங்களுள் உண்டாக்கிக் கொண்டே இருக்கின்றன. இருந்தாலும் மாந்தர்களின் எதிரியான நோய் நுண்ணுயிரிகளை எதிர்த்து வெற்றிபெறப் புதிய முறைகளை ஆராய்ச்சியாளர்கள் ஆக்கிக்கொண்டே இருக்கின்றார்கள்.

உறுப்பினர்களுக்கு......

முகவரி மாற்றம் வேண்டும் உறுப்பினர்கள் தங்கள் பழைய முக வரிகளையும் தெளிவாக எழுதுவதுடன் தம் உறுப்பினர் எண்களையும் தவறாமல் குறிப்பிடுதல் வேண்டும்.

புரதக் குறையுணவம்
(KWASHIORKOR)

-பொ. குமாரசாமி
-சா. க. பழனிச்சாமி

தொடக்கம்:— குறையுணவம் அல்லது குறையுணவு நோய் என்பது நமதுடலுக்கு வேண்டிய முகாமையான சாரப் பொருள்களில் ஒன்றோ, பலவோ, நம் உணவில் வேண்டிய அளவைவிடக் குறைந் திருப்பதால் உண்டாவதாகும். இத்தகைய நோய்கள், நமது நாட் டைப்போல ஏழ்மை நிறைந்த உலகின் பல்வேறு நாடுகளிலும் மிகுதி யாகக் காணப்படுகின்றன. இத்தகையவற்றில் முகாமையாகப் புரதச் சாரக் (Protein) குறைவால் உண்டாகும் நோயான புரதக்குறை யுணவம் அல்லது புரதக் குறையுணவு நோய் அல்லது கவலைப்படு தல் என்பதைப்பற்றி இவண் சிறிது காண்போம்.

புரதக்குறையுணவம சிறுவர்களிடம்-பொதுவாக ஏழ்மை நிறைந்த, மக்கட்பெருக்கம் மிகுந்த இடங்களில் வாழுகின்ற, துப்புர வற்ற சூழ்நிலையிலுள்ள சிறுவர்களிடம் மிகுதியாகக் காணப்படுகின் றது. இச் சிறுவர்களில் பெரும்பான்மையோர், நாள்பட்ட குடல் நோய்களோ, மூச்சுறுப்பு நோய்களோ உடையவர்களாக உள்ளனர். மேலும், பொதுவாக அனைவருமே புரதச்சத்துக் குறைந்த உணவு களையே உண்போராய் உளர்.

இந்நோய்க்குக் கரணியங்கள்:-

1. அகவை: (Age).- பொதுவாகப் பால்போன்ற (தாய்ப்பால்) நீருண்டி விடுத்துச் சோறுபோன்ற கடிய உணவு உட்கொள்ளத் தொடங்கிய காலத்து, உணவின் தகுதி, குறிப்பாகப் புரதச்சாரம் குறைந்த விடத்தும், நாட்பட்ட நோய்கள் மிகுதியாக வந்தவிடத்தும், இந்நோய் மிகுதியும் காணப்படும, இந்நோயில் 72% 1-3 ஆண்டு அகவைக்குள் காணப்படுகின்றது.

2. குமுகாயப்-பொருளியல் நிலை (Socio-Economic States):- ஏழ்மை, கவனிப்பின்மை, துப்புரவற்ற சூழ்நிலை. ஆகியவற்றால் இந் நோய் மிகுதிப்படுகின்றது.

3. உணவுப் பழக்க வழக்கங்கள்:—

(அ) நாட்பட்ட நோய்களுற்ற காலத்துப் பட்டினி போடுதல்.

(ஆ) கூவைக்கிழங்கு (Arrow-Root)க்கஞ்சி

(இ) குழந்தைகளுக்குத் தீநீர் (Coffee) கொடுத்தல்.

(ஈ) விளக்கெண்ணெய் கொடுத்தல் ஆகிய இந்நோய் தோன்றக் காரணங்கள்.

4. பெரும்பான்மையான விடத்து, உணவில் புரதக்குறைவோடு

(அ) வயிற்றுப்போக்கு (Diarrhoea), வயிற்றுக்கடுப்பு (Dysentry),

(ஆ) தட்டம்மைக்கு (Measles)ப் பின்னேற்படும் குடல் அழற்சி.

(இ) உருக்கி நோய் (Tuberculosis),

(ஈ) ஒரோவழி குடற்காய்ச்சல் (Typhoid), சிறுநீரக நோய்கள் போன்ற நோய்களும் புரதக்குறையுணவத்திற்குக் கரணியங்களாகின்றன.

இந்நோயின் கரணியங்கள் சிற்சிலவிடத்து, இடத்திற்கிடம் மாறுபடும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் ஏழ்மையின் காணியத்தால் புரதச்சராம் குறைந்த உணவையே உட்கொள்வதாலேயே இந்நோய் உண்டாகின்றது. ஆனால் கிழக்காப்பிரிக்காவில், சிசிலிவில்லியம் (Cecily Williams) என்பவரின் கூற்றுப்படி. 8% மட்டுமே உணவுக்குறைவால், ஏழ்மையால் இந்நோயுண்டாகின்றது; பிற, குமுகாய, மனவியல் கரணியங்களாலும், பிற நோய்களுமே உண்டாகின்றது.

புரதக்குறையுணவமும் பிறநோய்களும்:- பெரும்பாலும் புரதக்குறையுணவும் பிறநோய்களோடு சேர்ந்தே வருகின்றது. சென்னையில் இது பொதுவாகக் கொக்கிப்புழு (Round Worm) அண்ணுயிரி (Amoeba) இவற்றாலேற்படும் நோய்களோடும் (Ascariasis & Amoebiasis), உருக்கிநோய், வயிற்றுப்போக்குக்குப் பின்னேற்படும் குடல் அழற்சி (Enteritis), மற்ற நுண்ணுயிரி வயிற்றுப் போக்கு ஆகியவற்றோடும் சேர்ந்தே காணப்படுகின்றது. தட்டம்மையும், குத்திருமலும் (Wooping Cough), இந்நோய்க்குத் துணையாகின்றன. நோய்ப்பட்ட குழந்தைகளின் முந்நாட்களைப்பற்றி நன்கு வினவின் இந்நோய் மேற்சொன்ன ஏதோவொரு நோயோடு தொடங்கியிருப்பதையறியலாம்.

மேலும் கொக்கிப்புழு, நலமிக்க குழந்தைகளிருப்பதைவிடப் புரதக்குறையுணவமுடைய குழந்தைகளிடை மிகுதியாகவே உள்ளது. பொதுவாகப் புரதக்குறையுணவக் குழந்தைகளுக்கு நோய்-தடுக்கும் திறன் மிகவும் குறைந்துள்ளதாகவே கருதப்படுகின்றது. ஆனால் இஃதை அறிவியலடிப்படையில் உறுதி செய்வது கடினம். இருப்பினும் ஓலரேட் (Olerate) போன்றோர், புரதக்குறையுணவ முடையோர் உடல்களில் தொண்டையழற்சி (Diphtheria) நோய்க்கான எதிர்ப் பொருள் ஆக்கம் (Antibody Production) குறைந்த அளவிலேயே உள்ளதாகக் காட்டியுள்ளனர்.

புரதக் குறையுணவமும் நாள்பட்ட வயிற்றுப்போக்கும்:-நுண்ணுயிரிகளாலும் ஒட்டுண்ணி (Parasite) களாலும் ஏற்படும் வயிற்றுப் போக்கு புரதக்குறையுணவ முள்ளோரிடத்துப் பெரிதும் உண்டாகின்றது. சிலவிடத்து அவையே, புரதக்குறையுணவத்தின் தொடக்கத்திற்கும் காரணியமாகின்றன. நுண்ணுயிரிகளின் தாக்குதலால் குடலின் சளிப்படலம் (Mucous Membrane) பெரிதும் சிதைகின்றது இதனால் செரித்த உணவின் உள்ளீர்ப்பு (Absorption)ப் பெரிதும் குறைகின்றது. இது வயிற்றுப்போக்குக்கு வழி செய்வதாகக் கருதப்படுகின்றது. புரதக் குறையுணவத்திலேற்படும் "டைசேக்கரைடு" (Di-Saccharide) என்ற பொருளைத் தாங்கவியலாத் தன்மையே (Intolerance) வயிற்றுப்போக்குக்குக் கரணியமாகின்றதெனத் தென்னாப்பிரிக்காவைச்சேர்ந்த அறிஞர் சிலர் காட்டியுள்ளனர். உணவிலிருந்து மாவுப் பொருளை (Carbohydrate) நீக்கிவிடின் வயிற்றுப்போக்கு வெகுவாகக் குறைந்து விடுகின்றது. நுண்ணுயிரிகளும், ஒட்டுண்ணிகளும், முன்கூட்டியே புரதக் குறைவால் சிதைந்துள்ள குடலில் கருநீராகச் சருக்கரைச்சேர்மம் தாங்கவியலா நிலையை யுண்டாக்குவதில் பங்கு கொள்வதாகப் போவி என்னும் அறிஞர் கூறுகின்றார். ஆக, புரதக் குறையுணவத்தில் வயிற்றுப்போக்கு

(அ) நுண்ணுயிரி, ஒட்டுண்ணிகளின் தாக்குதலாலும்,

(ஆ) குறையீர்ப்பு நோய்க்கூறாலும் (Malabsorption Syndrome)

(இ) கருநீரகச் சர்க்கரைச் சேர்மம் தாங்கவியலாமையாலும் (Disaccharide Intolerance),

(ஈ) வெளிமக் குறைவாலும் (Magnesium Defeciency), ஏற்படலாம்.

புரதக் குறையுணவமும் வெளிமக் குறைவும்:-சென்ற சிலஆண்டு களில், பல ஆய்வாளர்கள், புரதக் குறையுணவ முற்றோரிடத்து வெளி மம் வெகுவாகக் குறைந்துள்ளதைக் காட்டியுள்ளனர். இஃது இந் நோயின் பண்டுவத்தில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளது. காடல் (John. L. Caddel) என்பாரும் பிறரும், உணவில் வெளிமத்தைச் சேர்ப்பதால் இந் நோயுற்றோர் நன்கு தேறிவருதலைத் தெளிவு படுத்தி யுள்ளனர். மேலும், காடல், புரதக் குறையுணவத்திலும், மற்ற கடிய குறையுணவங்களிலும் ஏற்படும் நரம்பு மண்டல மாற்றங்களும், நெஞ்சாங்குலை-குருதிக் குழல் மாற்றங்களும், (Cardio-Vascular Changes), மாவுப்பொருள், கொழுப்பு (Fat), 'ஆ' கூட்டு உய்வுணா (Vitamin B Complex), ஊக்கிநீர் (Enzyme) ஆகியவற்றின் மாறுபட்ட வளர்-சிதை மாற்றங்களும் (Meta Bolism), மக்னீசியக் குறைவர்லேற்படலாம் என்று கூறுகின்றார். (இதன் ஒரு பகுதித் தொடர்ச்சியை 49-ஆம் பக்கம்பார்க்க. அதன்பின் தொடர்ந்து படிக்க) ஆழ்ந்த புண்கள் ஏற்படலாம். (ஆ) தோலில் தடிப்புகள் தோன்றலாம். இவை உடம்பின் எல்லா இடங்களிலும் வரும். சொரிந்த இடங்களில் நகக்குறிகள் எளிதில் படியும்; அரிப்பு மிகுந்திருக்கும். இம்மாற்றங்கள் உய்வுணா ஆ கூட்டுக் குறைவோடும், நிறமிழந்த மயிருடைய நிலையோடும் சேர்ந்து காணப் படும். இம்மாற்றங்கள் ஏற்பட்ட விடத்துள்ள தோல் உரிந்தபின் அவ் விடம் சிவந்தும், நீர்வடிந்து கொண்டும் இருக்கும். இது பொதுவாக முழங்கால் மூட்டின் பின்புறம், முழங்கை மூட்டின் முன்புறம் ஆகிய இடங்களில் ஏற்படும். இவ்விடங்கள் பின் நுண்ணுயிரிகளின் தாக்குத லுக்கிரையாகும். (இ) கொசு கடித்தது போன்ற சிறுசிறு தடிப்புகள்-குருதிக் கசிவுகளோடு-ஏற்படலாம். (ஈ) தோலில் வெடிப்புகள் -வறண்ட வயல்களில் வெடிப்புகள் ஏற்படுவதைப்போல-ஏற்படலாம் (உ)தளர்ந் துள்ள தோலில் நீர் தங்குவதால் சிறு கொப்புளங்கள் ஏற்படலாம். (ஊ) மூட்டுகளுள்ள விடத்து மடக்கி-நீட்டலால் தோலில் வெடிப்புகள் -நன்கு பழுத்த தக்காளிப்பழத்தில் ஏற்படுவதைப்போல-ஏற்பட்டு நீர்க்கசிவும ஏற்படலாம். (எ) தோலும், சளிப்படலமும் இணைகின்ற இடங்களில்-வாய், மூக்கு, மலவாய் போன்றவிடங்களில் சிறுபுண்கள் ஏற்படலாம்.

6 கல்லீரல். மாற்றங்கள்:- கல்லீரல் பெருத்தும், கொழுப்பகச் சிதைவொடும் (Fatty Degeneration) இருக்கும். கணையம் (Pancreas)-சுரப்பிகள் வற்றியிருக்கும், குடல்:- சளிப்படலம் வற்றியிருக் கும். நெஞ்சாங்குலை (Heart) வேகம் குறைந்திருக்கும்.

7. தசை மாற்றங்கள்:- தசைகள் வற்றிப்போயிருக்கும். ஆனால் இது நீர்க்கட்டால் மறைக்கப்பட்டிருக்கும்.

8. குருதிச் சோகை:- (Anaemia):- குறைந்தோ, மிகுந்தோ பெரும்பான்மையானோரிடத்துக் காணப்படும்.

9 பசி குறைந்திருக்கும்.

10. பல சமயங்களில் உய்வுஞ அ, ஆ கூட்டு இவற்றோடு இந்நோய் சேர்ந்திருக்கும். இவ்வூட்டச்சாரக் குறைவு இடத்திற்கிடம் மாறுபடும். சென்னையில் ஊட்டச்சாரம் அ-30%, ஆ கூட்டு 40% நோயாளிகளில் மிகவும் குறைந்து காணப்படுகின்றது. உய்வுஞ 'அ' வுக்கு உடனடியாகப் பண்டுவம் செய்தாக வேண்டும். இல்லையேல் இது கண்ணின் ஊடகச்சுவரை (Cornea; கருவிழி)த் தாக்கியழித்துப் பார்வையைக் கெடுத்துவிடும். இக் குறையுள்ளோருக்கு முதலில் இருளில் பார்வை குறையும். கண்ணின் ஒளி மங்கும்; பிறகு ஊடகச்சுவர் கரைந்து புண் உண்டாகிப் பார்வை நிலையாகக் கெட்டுவிடும்.

புரதக் குறையுணவத்திலேற்படும் உயிர்வேதியல் (Bio-Chemical) மாற்றங்கள்:—

புரத வளர்சிதை (Protein Metabolism) மாற்றங்கள்:—

(1) குருதிநீர் (Plasma)ப் புரதம் வெகுவாகக் குறைந்திருக்கும். அதில் குறிப்பாக வெண்புரதமும் (Albumin), B-பந்துப் புரதமும் (B-Globulin)குறைந்திருக்கும். α 1, α 2, α -பந்துப்புரதங்கள் மிகுந்திருக்கும் (2) குருதிநீரில் புரதப்புளியங்களின் (Amino Acids) அளவும் மாறுபட்டிருக்கும். (3) குருதிநீரில் தாமிரம், இரும்பு ஆகியவற்றின் அளவு குறைந்திருப்பதால் புரதம் கட்டும் திறன் குறைந்திருக்கும். (4) எல்லா ஊக்கி நீர்களின் அளவும் குறைந்திருக்கும்.

மாவுவளர்-சிதை மாற்றங்கள்:-(1) "டைசேக்ரைடு" தாங்கல் இயலாமை. (2) பட்டினிக்காலக் குருதிச் சருக்கரை தாங்குநிலை (Fasting Blood Sugar Tolerance) சிறிது குறைந்திருக்கும். (இ) குருதிநீர் "இன்சுலின்" குறைந்திருக்கும்.

கொழுப்புவளர்-சிதை மாற்றங்கள்:- கொழுப்புப்படிந்த கல்லீரல் பெரும்பாலும் இந்நோய்க்கூறின் ஒரு பகுதியாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணியங்களாவன:- மிகுந்துள்ள மாவுப் பொருளி

னின்றும் "ட்ரைகிளிசரைடு" (Tri-Glyceride) என்ற பொருளைக் கல்லீரல் மிகுதியாக உண்டாக்குவதும்; கொழுப்பு சேர்த்து வைக்கப்பட்டுள்ள இடங்களிலிருந்து வெளிவிடப்படும் சிலவகையான கொழுப்புப் புளியங்கள் (Fatty Acids) கல்லீரலுக்குக் கொண்டுவரப்படல்; அல்லது கல்லீரலிலிருந்து கொழுப்பை வேறிடங்களுக்கு எடுத்துச்செல்ல வியலாமை ஆகிய.

கனிம-(Mineral) வளர்-சிதை மாற்றங்கள்:- இந்நோயில் உண்டாகும் நீர்க்கட்டு, உடலில் உவரியத்தோடும் (Sodium), மற்ற மின் பகுபடு பொருள்க(Ion)ளோடும் சேர்ந்து, நீர் உடலணுக்களுக்கு வெளியே மிகுதியாகத் தங்குவதாலுண்டாவதாகும். எனினும், இந்நோயுற்றோர் உடலிலுள்ள மொத்த மின் பகுபடு பொருள் நலமுடையோரிடத்துள்ளதை விடக் குறைவாகவே யுள்ளதாகக் கூறப்படுகின்றது. குருதி நீரில் பொட்டாசியத்தின் அளவு மாறுமலும் உவரியத்தின் அளவு சிறிது மிகுந்தோ, அல்லது மாறுமலோ இருக்கும். மக்னீசியம் குறைந்திருக்கும்.

நோயியல்:- (Pathology):- புரதக் குறைவால் உடலின் எல்லா உறுப்புகளுமே தாக்கப்பட்டிருக்கும். அவற்றிலும் குறிப்பாக மென்னிமையங்கள் (Soft Tissue) புரதமிழந்து வற்றிப்போயிருக்கும். புரதத் தன்மையுடைய எல்லா ஊக்கிநீர்களுமே குறைந்திருக்கும் கணையம், உமிழ்நீர்ச் சுரப்பிகள், கண்ணீர்ச் சுரப்பிகள், சிறுகுடலிலுள்ள சுரப்பிகள் ஆகியவையும் வற்றிப்போயிருக்கும். கல்லீரல் வெளுத்தும், தொள தொளப்பாகவுமிருக்கும். அதில் மிக்கக்கொழுப்பு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும்.

இந்நோயின் முடிவு:- இஃது, இந்நோயின் கடுமையைப்பொறுத்தும் குறிப்பாக நரம்பியல் மாற்றங்களைப் பொறுத்தும்; நோய்க் கண்டுபிடிப்பையும், பண்டுவத்தையும் பொறுத்தும் மாறுபடும். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டோரில் இறப்பு விகிதம் 7-16% ஆகும்.

பண்டுவம்:- (Treatment) இந்நோய்க்குப் பண்டுவம், புரதம் நிறைந்த உணவைக் கொடுப்பதுமட்டும் போதாது, பண்டுவத்தின் நோக்கம்-நுண்ணுயிரிகளின் தாக்குதலுக்கும்; நீர்-மின்னேற்றவணு (Electrolytbe) மாற்றங்களுக்கும், நரம்பியல் மாற்றங்களுக்கும், உடனடியாகப் பண்டுவமளித்தலும், ஊடகச்சுவர்ச் (கருவிழி) சிதை

வைத் தடுக்க உடனடியாக முயற்சி செய்தலும், புரதக் குறையைக் கூடுமானவரை சரிக்கட்ட முயற்சி செய்தலுமாகவும் இருத்தல் இன்றியாமை.

உணவு:-(சென்னையில் கண்காணிப்பின் கீழ்க்கொடுத்து ஏற்றதெனக் கொள்ளப்பட்டவை).

(1) வறுத்த கடலைமாவு (180) 'கிராம்' கொழுப்பு நீக்கப்பட்ட பால் (Skimmed Milk) (45 கி.), வெல்லம் (90 கி.), நீர் ஆகிய கொண்டு செய்த கஞ்சி.

(2) மூன்று பங்குக் கொழுப்பு நீக்கிய நிலக்கடலைமாவையும் (120 கி.), ஒருபங்கு வறுத்த கடலைமாவையும் (40 கி.), (75 கி.) வெல்லத்தோடு சேர்த்துப் போதுமான அளவுநீரோடு 10 நிமையங்கள் இளஞ்சூட்டில் வைத்துச் சமைத்தது.

(3) மூன்றுபங்கு வறுத்த கடலையும் (180 கி.), ஒருபங்கு உளுந்துப்பருப்பு மாவையும் (60 கி.), நீரில் ஊறவைத்து, இட்டளியாகச் சமைத்துச் சாற்றுடன் கொடுத்தல்.

(4) வறுத்த கடலைமாவைப் (180 கி.), பாலில் (15 அ.) கலந்து, வெல்லம் (75 கி.) சேர்த்துக் கொடுத்தல்.

(5) கொழுப்பு நீக்கிய (5 அ. 'அவுன்சு') பாலோடு ($2\frac{1}{2}$ அ.) வெல்லம் கலந்து கொடுத்தல்.

(6) கொழுப்பு நீக்கிய நிலக்கடலை மாவைக் (80 கி.) கடைந்த பாலோடு (40 கி.) கலந்து, கரும்புச் சர்க்கரை (60 கி.) சேர்த்துப் போதுமான அளவு நீரோடு காய்ச்சிக் கொடுத்தல்.

ஒப்பிட்டு நோக்குங்கால், வறுத்த கடலையும், கொழுப்பு நீக்கிய பாலும் 4:1 என்ற விழுக்காடு உள்ள உணவு வகையே, நீர்க்கட்டை நீக்கச் சிறந்ததாகத் தெரிகின்றது.

புரதக் குறைபுணவத்தைப் போக்க நலமளிக்கும் உணவின் திறத்தைக் கீழ்க்கண்டவற்றாலறியலாம். [அ] வயிற்றுப்போக்கு நிற்றல். [ஆ] நீர்க்கட்டும், தோலில் ஏற்பட்ட மாறுதல்களும் மறைதல். [இ]

இழந்த பசி திரும்புதல்; [ஈ] களைப்பு, பிடிப்பின்மை ஆகிய மறைதல். [உ] கல்லீரல் மாற்றங்கள் மறைதல், [ஊ] குருதியில் செவ்வணுக்கள் மிகுதல்; [எ] குருதிப் புரத அளவு நன்னிலைக்குத் திரும்புதல் ஆகிய.

கொழுப்பு:- உணவில் கொழுப்புச்சாரம் குறைந்திருப்பது-குறிப்பாக வயிற்றுப் போக்கும், கொழுப்புப் போக்கும் உள்ளவிடத்து-நலம்.

ஊட்டச்சாரம்:- உய்வுணுச்சாரம் ஆ கூட்டு, இ, ஈ இவை போதுமான அளவு கலந்திருக்க வேண்டும். உய்வுணு அ மிகுதியாக இருக்க வேண்டும்.

புரதம்:- மூன்று ஆண்டுக் குழந்தைக்கு ஒரு நாளைக்கு 40-60 கி புரதம் கொடுப்பது நலம். கடுமையான புரதக் குறையுணவம், பசியின்மையோடு சேர்ந்திருப்பின, குழல் மூலமாகக் கடைந்தபால் அல்லது கடலைமாவுக் கஞ்சி கொடுத்தல் நலம். மேலும் இந்நோய் கடுமையாக உள்ளவிடத்து வெளிமம் (மக்னீசியம்) ஊசிமூலமாகக் கொடுத்தல் நலம். கடுமையாக இல்லாவிடத்து வெளிமம் உப்புகளை வாய் வழியாகவே கொடுக்கலாம். வெளிமம் நிறைந்துள்ள சில உணவுப்பொருள்கள்:- நிலக்கடலை, அவரை, பசுமையான இலைகளும், விதைகளும்.

இந்நோய்த் தடுப்பு:- இந்நோய் உணவுக் குறையாலுண்டாவதால், இந்நோயைத் தடுக்க உணவுக் குறையைப் போக்கவேண்டும். இது நாட்டை, அரசைப்பற்றிய சிக்கலாகும்.

இந்நோயைத் தடுக்கக் கூடியதும், எளிதில் கிடைக்கக்கூடியதுமான கடலைப்பருப்பு, நிலக்கடலை, உளுந்துப்பருப்பு, பச்சைப்பருப்பு, கொழுப்பு நீக்கப்பட்ட அல்லது தூயபால் ஆகிய வற்றுலாவது, குறிப்பாக இந்நோய்க்கு மிகுதியும இலக்காகும் 1-5 ஆண்டு அகவையுள்ள சிறுவர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டியது இன்றியமையாமை. இதற்காகக் "குழந்தைகள் நல நிலையங்களை" ஏற்படுத்தி அவற்றின் மூலம் மேற்சொன்ன உணவுகளை எளிதாகக் கிடைக்கச் செய்யலாம். மேலும் அந்நிலையங்கள் மூலம் மக்களுக்கு-குறிப்பாகத் தாய்மார்களுக்குத் துப்புரவுபற்றியும், சாரமுள்ள உணவு வகைகள் பற்றியும், அவைகளைச் சமைக்கும் வழிகள் பற்றியும் அறிவுறுத்தலாம். அத்துடன் தடுக்கவல்ல நோய்களை ஒழிக்கவேண்டும். O

(44-ஆம் பக்க இடைத் தொடர்ச்சி)

புரதக் குறையுணவத்தின் அறிகுறிகள்:—

1, நீர்க்கட்டு (Edema): மிகுந்தோ, அல்லது உடம்பின் தாழ்த்த பகுதிகளில் மட்டுமோ இருக்கும்.

2. நரம்பியல் மாற்றங்கள்;- களைப்பு, பிடிப்பின்மை, எளிதாக எரிச்சலடையும் தன்மை ஆகியவும், தடித்தல், மயிரைப் பிடுங்கிக் கொள்ளல் போன்ற பழக்க மாற்றங்களும், கீழ்ச் செயல் நரம்பு (Lower) Motor neuron) மாற்றங்களும், தன்வினை (Autonomic) நரம்பு மாற்றங்களும் ஒரோவழி மேற்செயல் நரம்பு (Upper Motor Neuron) மாற்றங்களும், சிலவிடத்து உணர்-நரம்பு (Sen Sory Neuron) மாற்றங்களுங்கூட ஏற்படலாம். இம்மாற்றங்கள் நிலையானவையா அல்லது தற்காலிகமானவையா என்பது ஐயப்பாட்டிற்குரியதாகவே யுள்ளது.

3. வளர்ச்சிக் குறைவு:-

4. மயிர்களில் ஏற்படும மாற்றங்கள்:- 46% நோயாளிகளில் இவை காணப்படுகின்றன. (அ) தோல் ஊட்டமற்றிருப்பதால் மயிர் தானுக உதிரும். இதனுல் முழுவதுமோ, அல்லது சிற்சிலவிடங்களில்-குறிப்பாக அழுத்தப்படுகின்ற இடங்களில்-மட்டுமோ வழுக்கை விழலாம். (ஆ) ஊட்டமற்ற மயிர்ப்பை (Hair Follicle) னின்றும் வருவதால், மயிர்கள் நிறமிழந்து-கருமை நிறமிழந்து செம்பட்டையாக-இருக்கும். (இ) மயிர்கள் பசையிழந்து சொர சொரப்பாகவும், எளிதில் உடையக் கூடியதாகவும் இருக்கும். (ஈ) மயிர் நுனிகள் பிளந்திருக்கும்.

5 தோலில் ஏற்படும் மாற்றங்கள்:- இவை 56% நோயாளிகளிடம் காணப்படுகின்றன. இம்மாற்றங்களுக்குக் கரணியமாகக் கருதப்படுவன:- (அ) தோலிலேற்படும் நீர்க்கட்டினுலும், தோலுக்கு வேண்டிய ஊண் மாறுபட்டிருப்பதாலும், தோல் ஊட்டமற்றிருப்பது; (ஆ) ஊட்டமற்ற தோலில் அழுத்தங்கள், உராய்வுகள் ஏற்படல்; (இ) தோலின் குருதிக் குழல்களுக்குச் சிதை வேற்படல் ஆகிய. மாற்றங்கள்:- (அ) மிகுதியாக அழுத்தப்படுகின்ற இடங்களில்-தொடை, வயிற்றின் கீழ்ப்பாகம். (புட்டம்) போன்ற இடங்களில், தோல் சாம்பல் நிறமாகவோ அல்லது குருதி கன்றியோ தோன்றும். இதுபின்னர் கறுஞ்சிவப்பாகவோ, அல்லது கறுப்பாகவோ மாறும். தோல் வறண்டும், சொர சொரப்பாகவும, தடித்தும், எளிதில் உரித்துவிடக் கூடியதாகவும்-மாழைக் குழல்களின் மீதுள்ள நாளான வண்ணப் பூச்சுகள் உரிந்து வருவதைப் போல-இருக்கும். இதற்கடியில் தோன்றும புதுத் தோல் நிறமிழந்திருக்கும். சில சமயங்களில் கன்றிய இடங்களில், குடுகு, (புட்டம்) புறங்கால் போன்ற இடங்களில்... (மிகுதியைத் தொடர்ந்து 44-ஆம் பக்கம் படிக்க)

-மணிவேலன்-

வேலி வேண்டும்!

1. செழித்துவளர் பயிரிடையே களையெடுக்க விரும்புவதாய்ச்
சொல்லிக் கொண்டு
விழிப்பின்றிப் பயிர்களையும் பிடுங்குகின்ற செயல்கண்டால்
வெட்கங் கொள்வீர்!
குழந்தையின்மேல் அளவற்ற அன்பென்றே இறுகணைத்துக்
குரல்வளையை
அழுத்துகின்ற கொலைச்செயலை ஐயையோ....! கண்டக்கால்
ஆற்றுவீரோ?

2. 'முகமழிப்புச் செய்கின்றேன்' எனச்சொல்லிக் கத்தியினால்
மூக்கைக் கொய்தல்
தகும் செயலோ? வேருக்கு வெந்நீரைப் பாய்ச்சுவதால்
தழைப்ப துண்டோ?
நடுமிளமைக் குமரிக்கு நல்லாடை புனைவதற்கு
நாட்டங் கொண்டு
பகற்போதில் நடுத்தெருவில் ஆடைகளைக் களைவதுதான்
பண்போ சொல்வீர்?

3. கண்ணுக்குக் குளிர்மையைத் தீட்டுவதாய் நினைத்தபடிக்
கத்திபட்ட
புண்ணொழுகு குருதியுடன் புழுதியினைக் குழைத்தெடுத்துப்
பூசல் நன்றே?
வெண்ணிறத்து மணப்பொடியை முகத்துக்குப் பூசுதற்கு
விருப்பம் கொண்டு
மண்ணெடுத்துப் பூசுகின்ற 'மடவாரும்' உள்ளார்கொல்
மாநிலத்தே?

4. மழலைமொழிக் குழந்தைக்குப் பாலூட்டி வளர்ப்பதற்கு
மாருய், நஞ்சை
அழலூட்டிக் கொல்வதுவோ? படுப்பதற்குப் பஞ்சணையை
அளிப்பே னென்று
குழிதோண்டி யதிலிட்டு மூடுவதோ? மணப்பந்தல்
கூட்டத்தின்மேல்
பொழிவதுவோ சேலத்துத் திருமணிமுத்தாற்றின் நீர்?
பொறுப்பா ருண்டோ?

5. தமிழ்ப்பயிரை மேயவரும் கழுதையினை அடுத்தடுத்துத்
தடியால் தாக்கித்
திமுதிமென ஓட்டிவிட எத்தனையோ போராட்டம்!
தீயில் வெந்தும்
உமிழ்கின்ற தீக்குண்டால் உயிரிழந்தும் தடியடியால்
உறுப்பிழந்தும்
எமதருமை மாணவரும் எம்மருமைத் தமிழர்களும்
ஏ! ஏ! வீழ்ந்தார்!

6. "ஒழிக இந்தி! வாழ்க தமிழ்!" எனு முழக்கம் சுவரெல்லாம்!
ஊரி லெல்லாம்!
விழிதிறந்தால் உந்துவண்டி, சரக்குந்தம், இன்ப ஊர்தி
மேலே யெல்லாம்
முழக்கங்கள்! ஆகாகா! உணர்வுக்குப் பஞ்சமில்லை!
முத்தமிழ்மேல்
கொழுக்கட்டை தின்பதற்கு விருப்புள்ள சிறுவர்போல்
கொண்டார் நாட்டம்!

7. எழுதிவைத்த முழக்கத்தை விழிதிறந்து பார்த்திட்டேன்....
ஏனோ நெஞ்சம்
அழுகிறதே... "தமிள்வால்க! ஒளிக இந்தி!" எனவெழுதும்
ஆற்றல் (?) கண்டே!
செழும்பயிரை மேயாது கழுதையினை ஓட்டுகையில்
திமுதிமென்று
குழைந்தழிய நம்காலால் மிதிப்பதுவோ தமிழ்ப் பயிரை?
கொஞ்சம் நிற்பீர்...!

8. முழக்கங்கள் செய்வதிலே முன்னணியில் இருக்கின்றோம்!
'முத்தமிழ்தான்'
விழியென்று பேசுகின்றோம்! புழுதியினை விழிமீதில்
வீசலாமோ?
பிழையின்றி நாம்கற்போம்'பெரும்புலமைநாம்கொள்வோம்!
பிழிந்தெடுத்த தனித்தமிழாய்; பிழையில்லாக் கருத்தணி
பிறக்க வேண்டும்' [யாய்ப்

9. நூறுமுறை "தமிழ்வாழ்க!" எனச் சொன்னோம்! ஆனாலும்
நூற்றில் பத்துக்
கூறேனும் தமிழ்வளர்க்கும் திருப்பணிக்கு நாமொன்றாய்க்
கூடினோமா?
வேறெங்கோ பிறந்தவர்கள் இங்குவந்து தமிழ்வளர்த்தார்
வெட்கி நாமும்
மாறுபட்ட கருத்தெல்லாம் விட்டொழித்துத் தமிழ்வளர்க்கும்
வழியைக் காண்போம்!

10. தன்கருத்தை யொப்பாதான் 'தமிழ்வாழ்க' எனச்சொன்னால்!
தனது வாயால்
புன்மையுற 'தமிழ் ஒழிக!' எனச்சொல்லும் போலிகளும்
புவியில் உள்ளார்'
என்செய்வோம் தமிழ்த்தாயே! நீ பெற்ற மக்களிலே
இன்னோரிங்கே
இன்னுந்தாம் வாழ்கின்றார்! என்றைக்கோ ஒன்றுவர்?
யாரே கண்டார்!

11. மேயவரும் கழுதைக்குக் காவலுக்கே நாமெல்லா
மிருந்து விட்டால்
போயெங்கும் மற்றுவேலை செய்துபொருள் ஈட்டுதற்கும்
பொழுதும் உண்டோ?
ஏயேயே! நினையீரோ...? பிரிவினையாம் வேலியினை
இட்டு விட்டால்
ஓயாது விரட்டுகின்ற வேலையில்லை! பிறதுறையில்
உழைக்க லாமே!

சாமு. ஆபிரகாம், தலைவர், பட்டப் பின்படிப்பு உயிரியியல் துறை,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

உயிரினங்களின் தந்நலங்கருதாத் தகைமை

SELE-SACRIFICE AMONG LIVING THINGS

வாழ்க்கையின் வெற்றி தோல்வி ஒருவரின் வாழ்நாள் நீட்டத்தால் கணக்கிடப்படாமல், அவர் ஆற்றிய அறச் செயல்கள், தொண்டுகள் என்பனவற்றாலேயே கணக்கிடப்படுகிறது. நல்லறஞ் செய்து நற்றொண்டாற்றியோர் பயன்பட வாழ்ந்து வாழ்க்கையில் வெற்றி கண்டார் என்றும், அல்லாதார் வாழ்க்கையை வீணே கழித்து ஒழிந்தார் என்றும் உலகம் சாற்றுகின்றது.

மக்களும் மாக்களும்:- பிறர் உற்ற நோய்கண்டு அஞ்சி, அதனைத் தணிக்க முயலும் வெற்றியே மக்களை மாக்களினின்று வேறுபடுத்தி நிற்கின்றது. வள்ளுவர் பெருமானும்,

அறிவினான் ஆகுவ துண்டோ பிரிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை

என்று சாற்றி, மாந்தன் அறிவு பெற்றதன் பயன் அஃதே யாகும் என்கின்றார். கந்தபுராண ஆசிரியர்,

உய்கை பொருளாய் ஒருவர்க்கு மோருதவி
செய்கை யிலனேற் சிறியோன் கழித்தபகல்
வைக லதுவோ; வறிதே யவன்வாழ்க்கை
பொய்கை மலர்ந்த கொட்டிபோலு பொலிந்துளதே

என்றுகூறி அதனை வலியுறுத்துகின்றார். பிறரை வாழவைக்கத் தம்மாலான உதவி ஏதுஞ் செய்கலாத தந்நலவாழ்க்கை பொய்கையில் மலர்ந்து மற்றோர்க்குப் பயனற்று விரைவில் மறையும் கொட்டிப் பூவின் வாழ்வோ டொக்கும் என்பதே அவர் கருத்து. மக்களினம் உய்யத் தோன்றிப் பிறர்நலங் கருதிப் பெருந் தொண்டாற்றிய சிபி, ததீசு, காந்தி, விநோபாபாவே, டேமியன் போன்ற பெருமக்கள் பலர்; தந்நலம் ஒன்றையே கருதி வாழ்ந்து கழிந்தோர் எண்ணிறந்தோர்.

தந்நலங் கருதா விலங்குகள்:- தந்நலங் கருதாத் தகைமாண் பெருங்குணம் விலங்குகளிடமும் காணப்படுவதாக உயிர்நூல் வல்லு

நர் பலர் கூறுகின்றனர். மாந்தருள் சிறந்தோர் தம்மவருக்காகத் தமது உயிரைப் பணயமாக வைத்துப் பெருந் தொண்டு ஆற்றுவதே போல் விலங்கினங்களுள்ளும் சில தம்மினம் வாழ்வதற்காகத் தம்முயிரைத் துரும்பென மதித்துப் போரிட்டு மடிகின்றன என்பர்.

பாபூன் (Baboon)

தென் ஆப்பிரிக்காவில், தம் வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்ட காலஞ்சென்ற யூழின் மாரேசு (Eugene Maraise) என்ற உயிர் நூல் வல்லுநர், குரங்கினத்தைச் சேர்ந்த பாபூன்கள் இரண்டு தம் இனம் உய்யத் தம் உயிரை மாய்த்துக்கொண்ட உள்ளம் உருக்கும் நிகழ்ச்சி ஒன்றை வண்ணிக்கிறார். பாபூன் தரையில் வாழும் விலங்கு. அதற்குத் தற்காப்புக்காகக் கூரிய உகிர்கள் இல்லை. எனவே தற்காப்புக்காகக் கூட்டங் கூட்டமாகவே பாபூன்கள் வாழும் இயல்பின. தமக்கு இடையூறு நேரின் கூட்டு முயற்சியாலேயே எதிரியைத்தாக்கி அவை தப்பித்துக் கொள்ளும். அவற்றிடையே காணப்படும் கட்டுப்பாடும் ஒழுங்கும் பாராட்டுக்கு உரியன.

மாரேசு ஆராய்ந்த பாபூன் கூட்டம் மற்ற உயிரிகள் அணுக முடியாத ஒரு மலை முழைஞ்சில் இரவைக் கழித்து வந்தன. அந்த முழைஞ்சுக்குச் செல்வதற்கு அரைக்கல் நீளமான, சில இடங்களில் அரை அடி அகலம் உள்ள ஒரு குறுவழி உண்டு. அவ்வழியே பாபூன்கள் ஒழுங்காகச் செல்வதை நாளும் கண்டு மாரேசு வியப்பில் ஆழ்ந்திருப்பார். ஒருநாள் அப் பாபூன்கள் அவ்வழியே சென்றுகொண்டிருந்ததைக் கீழே இருந்து ஒரு சிறுத்தைப்புலி கவனித்துக் கொண்டிருந்தது. அதனை அறிந்த வினைத்திட்ப மறவர்களான இரு பாபூன்கள், தம் கூட்டம் முன் செல்லத் தாம்மட்டும் திரும்பி வந்து சிறுத்தையைத் தாக்கத் திட்டமிட்டன. அச்சத்துடன் சென்று கொண்டிருந்த பாபூன் கூட்டத்தையே ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்த சிறுத்தை, அந்த இரு பாபூன்களையும் கவனிக்கவில்லை. குறிப்பிட்ட இடம் வந்ததும் அவ்விரு பாபூன்களும் கீழே நின்றுகொண்டிருந்த சிறுத்தையின் மீது அம்புபோல் பாய்ந்தன. ஒன்று சிறுத்தையின் தொண்டையைக் கவ்விக் கடித்தது; மற்றது அதன் முதுகெலும்பைக் கடித்தது. சிறுத்தை முதுகிற் கடித்த பாபூனைக் கடித்தது; தொண்டையைக் கடித்த பாபூனைத் தன் கூரிய உகிர்களால் குடல் வெளியே வருமாறு கிழித்தது. பாபூன்கள் இரண்டும் இறந்தன. சிறுத்தையின் தொண்டையில் பாபூன் கடித்ததால் அதன் செந்நீர் வடிகுழல் (Jugu-

lar Vein) கிழிந்தது. சிறுத்தையும் இறந்துவிழுந்தது. பாபூன் கூட்டம் மலைமுழைஞ்சை அடைந்தது. பகைவிலங்கின் கையிலிருந்து தம் இனத்தை மீட்கச் செந்நீர் சிந்திய பாபூன்களின் சீரிய மறந்தான் என்னே!

'அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'

என்ற வள்ளுவர் தம் வாழ்க்கை இலக்கணத்திற்கு இதனினுஞ் சிறந்த எடுத்துக்காட்டு உண்டோ?

யானை:

கெனியாக் காடுகளில் விலங்கினங்களை வேட்டையாடிய இரு வேட்டைக்காரர்கள் வியத்தகு காட்சி ஒன்றைக் கண்டார்கள். வேட்டைக்காரர்களில் ஒருவர் ஒரு யானைக்கூட்டத்தை நோக்கிச் சுட்டார். அக்கூட்டத்திலிருந்த யானை ஒன்று சூடுபட்டுத் தரையில் உணர்ச்சியற்று வீழ்ந்தது. அந்நிலையில் யானைகள் இரண்டு ஓடிவந்து தம் மருப்புகளால் அதனை வாரி எடுத்து அதன் உடலைச் சுருட்டி மடக்கித் தம் உடல்களுக்கிடையே வைத்துக் கொண்டு சென்றன. வேட்டைக்காரர் இருவரும் அவற்றைத் தொடர்ந்தனர். அவ் யானைகள் இரண்டும் காயம்பட்ட தோழனை மூன்று நான்குமுறை கீழே வைத்தும், மறுபடி தூக்கியும் இரு கல் தொலைவிற்குக் கொண்டு சென்றன. காயப்பட்ட யானை தன்னுணர்ச்சி பெற்றபின் தானே நடந்து சென்றது. களிற்றினத்தின் அருள் உள்ளம் பாராட்டத் தக்கதன்றோ?

ஆய்வாளர் ஒருவர், யானைகள் இறந்த தம் நண்பனுக்கு இறுதிக் கடன் ஆற்றிய பண்பைப் பாராட்டியுள்ளார்.

நான்கு யானைகள் ஒருநாள் முழுவதும் பேருழைப்பால் பெரிய குழி தோண்டின. மற்ற ஐந்து யானைகள் இறந்த பெரிய ஆண் யானையை மெள்ள மெள்ள நகர்த்திக் குழிக்குள் தள்ளின. ஏழையொருவன் இறந்து கிடக்கிறான் நாகரிக மக்கள் வாழும் ஒரு நகரின் நடைபாதையில். அவனை ஏறிட்டுப் பார்ப்பார் எவருமிலர்; இது மக்கள் நாகரிகம். இறந்த தங்கள் நண்பனைக் குழித்தோண்டிப் புதைப்பது மாக்கள் பண்பாடு. இவ்விரண்டில் எது சிறந்தது?

ஓங்கி:

கடலிலே ஓங்கி (Dolphin) என்ற பாலூட்டி உண்டு. அது நம் தென்னிந்தியக் கடல்களிலும் உண்டு. அவை எட்டு அடி முதல் பதின் மூன்று அடிவரை நீளமானவை. ஓங்கிக் கூட்டத்தைச் சேர்ந்த ஒன்று காயப்பட்டாலோ அல்லது நீந்த முடியாவிட்டாலோ, மற்றவை அதற்கு உதவுகின்றன அவை தம் இனத்தைச் சேர்ந்தவற்றிற்கு மட்டுமின்றி பிற இனத்தைச் சேர்ந்தவற்றிற்கும் உதவும் இயல்பின.

பல ஆண்டுகட்கு முன்னர் கிரேக்க நாட்டுப்பாவலர் ஏரியன் (Arion) என்பவர் கடலில் மூழ்கிச் சாகும் பொழுதில் இருந்த பொழுது ஓங்கிகள் அவரைக் காப்பாற்றினவாம். 1943-ஆம் ஆண்டு ஃப்ளாரிடா (Florida)க் கடற்கரை யோரத்தில் தனியாகக் கடலில் குளித்துக் கொண்டிருந்த ஒரு பெண் திடீரென ஒரு பேரலையால் ஆழமான நீருக் குள் இழுத்துச் செல்லப்பட்டாள். அவள் தன்னுணர்ச்சியை இழக்கும் தருவாயில் யாரோ ஒருவர் தன்னைக் கீழே இருந்து தாங்கித் திரும்ப வும் கடற்கரை ஓரத்திற்கே தள்ளுவதாக உணர்ந்தாள். இறுதியில் கரை சேர்ந்தாள். கரையில் ஏறிய அவள் கைமாறு கருதாது தனக்கு உதவிய அவ்வருள் வள்ளல் யார் என்று அறியுமாறு திரும்பிப்பார்த் தாள். ஓர் ஓங்கியும் வேறொரு கடல்வாழ் உயிரியும் அவள் கண்ணிற் பட்டன. மணல்குன்றின் மீது நின்றுகொண்டு அக்காட்சியைக்கண்ட ஓர் ஆடவர், அவளைக் காத்தது ஓர் ஓங்கி என்றும் அதன் பின் காணப்பட்டது ஒரு சுறுமீன் என்றும் தெளிவு படுத்தினர். "உடுக்கை இழந்தவன் கை போல் ஆங்கே" அப் பெண்மணியின் இடுக்கண் களைந்த ஓங்கியின் பண்பட்ட ஒழுக்கத்தை என்னென்பது?

இடுக்கண்ணிலிருக்கும் ஓர் ஓங்கி ஓர் அவலக்குரல் விடுக்குமா யின் அக்குரலைக் கேட்டுத் தொலைவிலிருக்கும் எல்லா ஓங்கிகளும் துடிப்புடன வந்து அலக்கண்ணில் இருக்கும் நண்பனுக்கு அன்புடன் உதவுகின்றன. உள்ளத்தையுருக்கும் இன்னொரு செய்தி: சூலுற்ற ஓர் ஓங்கி தன் குட்டியை ஈனும்போது மற்ற ஓங்கிகள் விரைந்து வந்து அதைச் சூழ்ந்து ஓராண்போல் நின்று தாய்க்கும் சேய்க்கும் சுறு, முதலை போன்ற உயிரிகளால் யாதொரு வகை ஊறும் விளையாதபடி காத்து உதவுகின்றன. ஓங்கிகளின் தந்நலமற்ற தன்மைக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு

(தொடரும்)

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்-

சோம்பல் அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச்சொற்கள் பலகோடி! ஈங்கதனால்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்றாகப் பேணிவர நாம் முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரிய பொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக:
செப்பம் மொழிக்குச் சிறப்பு

கீழுள்ள சொற்களைத் தொகுத்து விடுத்தவர்:
இளஞ்சென்னி, புதுவை.

சேடை-*நீர்ப்பாய்ச்சி உழுத நன்செய் நிலம்*

கிட்டி-*வேலியின் இருபுறமும் குறுக்காகப் போட்டுக் கட்டப்படும் கழி*

பாந்து-*தாழ்வு, பள்ளம்*

பணிக்கர்-*சுதை பூசுபவர், விழல் அடிப்போர்;*

பரணை-*வீட்டில் விறகு சேகரிக்கக் கட்டப்படுவது*

குப்பி (கொப்பி)-*மாட்டுக் கொம்பில் அணியப்படுவது*

பொலுத்திகை, சூபாங்கு -பாசாங்கு

தண்டுகரை-*பெருவரப்பு*

வாஞ்சல்-*விழல்சூழ்ந்த நீண்ட அகலம் குறுகிய நீர்நிலை*

கருமாயம்-*கிராக்கி*   சல்லிசு-*எளிது*

உருப்புதல்-*ஆட்டுக்கல்லில் மா அரைத்தல்*

குடைக்கல்-*ஆட்டுக்கல்*

பற்றுக்கழி, புளிச்சாணிக்கழி -*ஏற்றக்கோல்*

கண்டியல்; சல்லடம்-*மெத்தை வீட்டில், மெத்தையின் உட்புறமாக இடப்படும் நீண்ட பெருஞ் சட்டங்கள்*

குமுலு-*கேழ்வரகு இயந்திரத்தில் உள்ள பள்ளம்*

சாலுங்கரம்-*திருமணப் பானை*   மரமுஞ்சி-*நகைமுக மற்றவன்*

சவுக்கம்-*சதுரம்*   புள்-*சிறு மரத்துண்டு*

கூழை-*ஏற்றத்தில் ஒருபுறத்தில் வைக்கப்படும் சேறு*

பழு-ஏணியின் குறுக்குக்கழித்துண்டு
மோழி-துணிமூட்டை
ஒறுக்களித்துப் படுத்தல்-உடலை ஒரு தோள் தாங்குமாறு படுத்தல்
தினவு-உணர்வு சிப்பம்-சிறு மூட்டை
ஒட்டை-ஆள்காட்டிவிரல் நுனி,பெருவிரல் முனை இரண்டிற்கும் இடையிலுள்ள தொலைவு
அடுபானை-சோறாக்கப் பயன்படும் பானை
விசிறுதல்-பரவுமாறு எறிதல் மால்-பள்ளம்
தட்டு-கேழ்வரகுத்தாள்
சம்பு-ஓலையால் பின்னப்பட்டு, மழைக்குப் பயன்படுத்தப் படுவது
கசங்கு-சம்புக்கிட்டி ஒய்யாரம்-அழகு, ஆடம்பரப்புனைவு
கெளிற்றி-தலையில் முட்களுள்ள மீன்
செல்லாக்காசு-தட்டைமீன் குசுமான்-சிறுமீன்
பிசுக்கு-கொசுரு மறுமாடி-கூரையின் சாய்வான பகுதி

மீன்வலையிலுள்ள பகுதிகள்:—

(க) குண்டு—வளைந்த கழி
(உ) கொண்டைக்கழி—நீண்ட கழி
(ங) மடி—மீன்சேர்க்கும் பகுதி

கரிக்கால்-பதராகாததும், முற்றாததுமான நெல்
சீத்தல்-தூய்மையாக்குதல்
பன்னை-சுருள் சாடு-பெரியகூடை
நுகுந்துதல்-புகுத்துதல் பத்தை-அடை
கொத்தை-வெற்றிலைப் பாக்குத் திரளை
நீர்குத்துதல்-நீர்விடுதல் மொத்துதல்-தலையில் அடித்தல்
தளுக்கு-எத்து பற்றுப்போடுதல்-பச்சிலை அரைத்துப்பூசுதல்
அப்புதல்-சேறு போன்றவற்றை வாரி அடித்தல்
பிட்டை-பிடித்துக்கொண்ட மயிர்ச்சேர்க்கை
சாக்கை-இறவானம்
உதைமானம்-முட்டுக்கொடுக்கப் பயன் படுவது
அகலம்-ஏற்றத்தில் படிகள் செய்யப்பட்டுள்ள மரத்துண்டு
உறிக்கல்-வெந்து உருமாறிய கல் குறடு-நீண்டதிண்ணை
அள்ளு-கதவைத் தாங்கும் இரும்பு நிலைப்படியில் அடிக்கப்பட்டிருப்பது; கீல்;
மங்கினி-கிண்ணி முடக்கு-திருப்பம்

முச்சிலு–விளையாட்டு முறம் மரிக்கை–பெண் ஆடு
அருவு–விளிப்பு கரைக்கட்டு–துணியின் ஓரப்பகுதி
பில்லெருது–நிறக்கலப்புள்ள எருது
சட்டிகள்:—
(க) கோப்பை–உணவு உண்ணப்படுவது
(உ) ஆடைச்சட்டி–சிறியது
(ங) அருக்கன்சட்டி–வாயகன்றது
(ச) தலாசட்டி–பெரியது
(ரு) குண்டுச்சட்டி–குழிவானது
தாங்கராய்–சோறு ஆறவைக்கப் பயன்படுவது மூங்கல் பட்டைகளால் ஆனது
சிமுக்கு–சிறு குச்சி நறுக்கு–சிறுபள்ளம்
வேப்புருன்–ஒழுங்கற்றவன் தரும்பு–மூளைக்குச்சி
இளுப்பாணி, அலவாங்கு }–கடப்பாரை
நிறைச்சல்–சாய்க்கடையில் கட்டப்படும் வேலி
அடம்பாக–நெருங்க
ஒண்டி–தாழ்ப்பாள்போட நிலைப்படியில் அடிக்கப்படுவது
மல்லை–சிறு மண்பானை மறவை–சிறுதோண்டி
பல்லா–பெரிய மண்மொந்தை கடை–பூணில்லா உலக்கை
காணிக்கல்–எல்லைக்கல்
வெடாச்சி–இறுமாப்பு ஈசாமை–வெறுப்பு
நோறு–வாய் சுறை–(பின்னல்) ஊசியின் முடி
ஒரட்டுக்கை–இடதுகை எறவு–உறவல்லாதார்
முக்காணி–ஏற்றச்சாலின் குறுக்குக் கழி

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்,
விழிசை-எழிலரசன், கம்பியாம்புலியூர்.

காகாணி–(ஏற்றத்தில்) வடம் விழாது தடுக்கும் சிறுகுச்சி
கொங்காணி–கிழிந்த துணியைத் தைக்கும்போது படியாத சிக்கலான நிலை; மழைக்காகக் கோணியைப் பயன்படுத்தும் நிலை
மட்டை–மட்டவகை கலப்பு நெல்
பொத்தார்–கலப்பையில் மேழியைத்தாங்கும் கட்டை
மூட்சூலை–பயனற்றவன்; (ஏசுதல்) தாறுமாருகப் பணியாற்றுபவன்
பால் மாறுதல்–சோம்பல்
அண்ணுந்தாள்–மாட்டின் கழுத்தையும் முன்கால்களில் ஒரு காலையும் இணைத்துக் கட்டுவது
உத்தி–திறமை. நமுடு–சிறுபேன். நமுட்டு–உதட்டின் விளிம்பு

ஆக்கு-கட்டுவதற்காக முறுக்கப்பட்ட வைக்கோல் தாள்
கதண்டு-அரிப்புண்டாக்கும் உலர்ந்தபாசி
மாசி-முகில். எரிகரும்பு-விறகு. நமுறு-(நமுத்தல்) ஈரக்கசிவு
சாட்டக்கூடை-மிகப் பெரிய கூடை
குழுக்கு-கசக்கு. குறுவ-பொடியாக.
பதவிசு-ஒழுங்காக. தாங்கு-அடி (உதை)
தொண்டி-பள்ளமான தோட்டம்
கொம்மைக்கட்டி-அடுப்பு அமைக்கப் பயன்படும் மண்ணால் செய்த கட்டி.
புழுக்கை-ஆடு, எலி, வௌவால் ஆகியவற்றின் மலம்
பாடாவதி-எதிலும் பிடிப்பின்றி பங்கறை-அழகற்றவள்
சம்பு-பனையோலையால் செய்யப்பட்ட மழைத்தடுப்பு
சட்டைபன்னுதல்-ஏரெடுத்துப் பார்த்தல் எறங்காடு-புன்செய்
கொலுப்பலகை-கதவில் அழகிற்கு அமைக்கப்பட்டுள்ள மரச்சட்டம்
ஒழுங்கு-வயல் (நன்செய்)

(எடுத்துக்காட்டாக வயலின் பெயராக: 1. சூரப்பன் ஒழுங்கு (2) மணியன் ஒழுங்கு)

வள்ளம்-1 மரக்கால் (சிறியது)
சங்கை மங்கி-பயிர்ப்பற்றவள் தோண்டி-சிறுகுடம்
எத்து-ஒட்டு காலி-ஒருநிலையிலில்லாதவன்
பூறுதல்-பிருண்டுதல். தூமை-பெண்டிரின் மாதப்போக்கு
பொறவடை-அரிக்கப்பட்ட (மரம்) செவுள்-கன்னம்
குன்னு-வாய்குறுகிய பெரிய மண்சால்
எதுக்கட்டை-ஏர்க்காலை முன்னால் தாங்குவது
தளாச்சட்டி-வாயகன்ற பெரிய மண் சால்
கடைதிரட்டுதல்-வண்டி அச்சு கடைதல்
படியாள்-பண்ணையில் எப்பொழுதும் பணியாற்றுபவன் (மாதக்கூலி)
அடையாள-வேலையிருந்தால் மட்டும் பொறுப்புடன் வந்து கூலிக்கு வேலை செய்பவன்
ஆரியம்-கேழ்வரகு (தானியம்) இறவாரம்-சாய்ந்தக்கூரை
இறை-பெண்களின் வளைந்த முன்னங்கை
உறுதல்-ஒன்றுதல் உலம்-திரட்சி குருமான்-சிறுமகன்
குரங்குதல்-வளைதல் முருகு-இளமை
முண்டான்-மஞ்சட் கிழங்கு மந்தம்-அறிவின்மை
வாட்டி-தடவை வங்கி வளையல்-நெளி வளையல்
வலக்கை-பயிற்சியினால் வலிமைபெற்ற கை

பாவேந்தர் நன்றிக்கடன்.

(தென்மொழி விடுத்த வேண்டுகோளுக் கிசைந்து அன்பர்கள் பாவேந்தர் தம குடும்ப நலத்திற்கென விடுத்த நன்கொடைப் பட்டியலைக் கீழே தருகின்றோம. தென மொழியின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து நன்றிக் கடனாற்றிய அன்பர் யாவருக்கும் எம் அன்பு கலந்த வணக்கமும் வாழ்த்தும உரிய வாகுக.

கீழுள்ள பட்டில் விளக்சம் பாவேந்தர் மகன் திரு, மன்னர் மன்னன் அவர்களால் கொடுக்கப் பெற்ற பணவிடைச் சாத்துகளை ஒப்பிட்டே தரப்பட்டதாகையால், விடுபட்டுபோன அன்பர்கள் யாவரும் இது குறித்துப் பாவேந்தர் மகனுக்கே . மடல்கள் எழுதக் கேட்டுக் கொள்கிறோம். ஆ-ர்)

பெங்களூர் 16, தூரவாணிநகர், தொலை பேசித் தொழிலகத் தமிழ் அனபர்கள் சார்பில் திரு. கு. பூபதிசுவாமிநாதன் அவர்கள் தொகுத்து விடுத்த தொகை.

உருபா

உருபா 5 கொடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள்: கு. சுவாமிநாதன், கு. பூபதி, கோ. த. மூர்த்தி, அ. மேசாக் (5-11) 20-11

உருபா 2 கொடுத்தவர்கள்

திருவாளர்கள்; கோ. அரி. பிரசாத், கோ. தா. கிருட்டிணன், து. கிருட்டிணன், அரங்க. திருச்சிற்றம்பலம், கோ. வேங்கடேசன், ஆர். நரசிம்மன, இரா. தியாகராசன், எ. இசாகி, ச. சானகிராமன், தொ. இரா. நித்தியானந்தன். 2-20 22-20

உருபா 1 கொடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள்: இசுதீபன், கோ. கண்ணன் (1-11), இரா. புருடோத்தமன்; சி. தேவராசன், அ செயபால் ராயன், கே. சனார்த்தனன், பி. சண்முகன், எ. இசு. இராசு, இ. சி. செயராமன், சி. இராசசேகரன, ந. சுந்தரமூர்த்தி, சோதிலிங்கம், கி. செகதீசன், தி. சி. நாராயணன், ந. எட்வட், பொ. குப்பன், சாகி. மக மதுகான், இல. எத்திராசன், சனார்தனன், க. தே. சார்லி, பி. முகுந்தன், பி. எம். தாமசு, ஒய். செயராமன், கே. இராமகிருட்டிணன், கே. வேங்கடாசலம், த. இலிங்குதால், பரமதாசு, இராமன், கோ. சுவாமிக்கண்ணு, பி. முத்துராசு, மு. சீனிவாசன், இசு. பிலவேந்திரன், பத்மநாபன், எம். சுந்தரம், ஓ. கிருட்டிணன், திருவாட்டிகள் இலீலாவதி, அலைசு. (37) 37-11

திரு க. சி. ஆஞ்சநேயன்	2-00

அவர்வழி ஓர் உருபா கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: ப. ந பார்த்தசாரதி, கி. நாகராசன், இர.கோதண்டபாணி, சிங்கார. இராதாமணாளன், இருதயநாதன், கே. நடராசன், இரா. சீனிவாசன், கு. ஏசுதாசன், இ. இராமமூர்த்தி, மு. சு. தீரன், ந. சண்முகம், இரா. ஆல்பர்ட் பீட்டர், வெ. பிச்சை, அ. பாலசுந்தரம், வெ. மரியதாசன், ஏ. ஏசுபாதம், சி சச்சிதானந்தம், சி. சிகாமணி, பொ. நடராசன், சு. கிருட்டிணன், எம். டி. இராமலிங்கம், சி. கமலநாதன், செ. முனுசாமி, சி. தங்கராசு, வே. த. செல்வம், த. சு. கிருட்டிணமூர்த்தி, த. சு. மணி, ம. சு. இராசன், கி. சங்கரநாராயணன், எம். இராசகோபால், சே. சம்பத்குமார், சுந்தரேசன், மு. சாதுல்லா, மோகன்ராசு, தா. சனார்தனன், ஆ. ச. சோமசுந்தாம், உலோகநாதன், அந்தோணி, பொ. நல்லமுத்து, இரா. சின்னதுரை, செ. தசரதன், கோ சு. மணி, செயராமன், அருணோதயம், அம்பிகாபதி, அ. சு. மணி, ந. தேவராசன், சங்கரசுவாமி, ந. தத்தாத்திரி, டி. வி. சரவணம், இரா. வேணுகோபால், ந. பிச்சுராமன், ந. வடிவேலு, வி. கோபால், என். இராமமூர்த்தி, டி. மனோகரன், ஆரிசார்சு, உலோ. பா. இரங்கன், எத்திராசு, கோ. மாரி. (60) 60-00

அவர்வழி 0–50 காசு கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: இராமபத்திரன், பழநி, பி தியாகராசன், மு. செகதீசன், தியாகராசு, செ வெ. பெருமாள், செ பிரான்சியசு சேவியர். (7) 3-50

திரு. வே. பெருநாடன்	2-00
அவர்வழி: கே. சீனிவாசன்	2-00

அவர்வழி: உருபா. 1 கொடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள்: வாசுதேவன், இராமையா, உ. சேக்நூர் அகமது, பெனடிக், மேகநாதன், எம். சாரங்கபாணி, சி. இராசகோபாலன், பர்லோன், பி. ஆர். கிருட்டிணமூர்த்தி, பசுபதி, சான்பீட்டர், சா. காந்தராசன், குமார், து. தசரதன், தனசேகரன், சி. சண்முகம், எம். பலராமன். (17) 17-00

திரு. இரா. வேல்முருகன் 5-00
அவர்வழி: திருவாளர்கள்: இரத்தினம்கெம்புராசு, வீ.தா. மூர்த்தி, இரா. சு. இரகு, ந. சீனிவாசன், சி. பழனி, இரா. ஞானசூரியன், (தலைக்கு 2 உருபாமேனி) 12-00
திரு. சு. அருணகிரி 1-50
திருவாளர்கள்: வே. சி. சனார்தனன், வேதகப்பீரம், தவ. செயராமன், வெ. பரசுராமன், வ. தி. சலபதி, வ. பார்த்தசாரதி, மு. சுந்தரராசன், தா. செயசீலன், மா. வின்செண்ட்மார்டின், இலக்குமணன் பாபு, ந பாலசுந்தரம், எக்சு. சியர்சு, செயராசு, இரா. சீனிவாசன், இரா. குருநாதன், மா. மோகன், கோ. ஏழுமலை, க. வெ. சுவாமிநாதன், நந்தகுமார், உமாபதி, பி. வி. என். ஐயங்கார், பி. எசு. பிரகலாத ராவு, ந. சண்முகம், அ. வின்செண்ட் சோசப்பு, சி. முத்துவேல் (0-50) 24-50
திரு ப. நாராயணசாமி 1-00
அவர்வழி: திரு பெ. சுப்பிரமணி 3-00
,, திரு. தா. அன்புரோசு 2-05
அவர்வழி: திருவாளர்கள்: து. அ. தாசன், மாசிலாமணி, தி. கு. சீனிவாசன் (தலைக்கு 1-01 உருபா மேனி) 3-03

(தலைக்கு ஓர் உருபாமேனி)

திருவாளர்கள்: வெ. துரைராசன், பா. இராசு, மா. பஞ்சாபிகேசன், கோ. சுந்தரராசன், இராசு சுந்தர், கோவிந்தராசு, பொ. வேதமாணிக்கம், என். நாராயணன், பா. சு. ஆதிகேசவேலு, வே. இரா. முருகேசன், அனந்தநாராயணன், மு. ஞானம், த. சி. சாமி, செ. சந்திரசேகரன், தி. சொ. உலோகநாதன், பா. காமேசுவரன், மு. நல்லமுத்து, இர. அகிலேசுவரமூர்த்தி, வெ. கிரிராசன், இரா. சரவணன், நா. கிருட்டிணன், கெ. சுந்தரராசன், பெ. கதிரவன், சக்கரவர்த்தி, சேக்இப்ராகிம், ச. அப்துல் ரகிமான், அ. கார்த்திகேயன், அ சு. மணி, ம. சத்தியநாதன், தீ. க. இராகவேந்திரன், ஏ இரா. சம்பத்குமார், சிவப்பிரகாசம் 32-00

திரு. கு. அய்யாவு, பழையசூரிபாளையம், நம்பியூர் (அஞ்) கோபி (வட்) அவர்களும் அவர் நண்பர்களும் 22-00

சென்னை-5, சிறப்புக்கட்டிட வட்டம் (வரைபடப்பகுதி) அலுவலர்கள், திரு. அ. பாலசுப்பிரமணியன் (மேற்பார்வையாளர்) அவர்கள் வழி விடுத்த நன்கொடை. 39-00

நெல்லை-2, தூயசவேரியார் கல்லூரி விடுதி, திரு மதார் அவர்களும், அவர் நண்பர்களும் 21-00

பெங்களூர்-16. தூரவாணிநகர் திரு. கு. பூபதிசுவாமிநாதன் அவர்கள் வழி இரண்டாம் முறையாக

திருவாளர்கள்: எசு. குருராசன், சு. இராதாகிருட்டிணன், (தலைக்கு 2 உருபாமேனி) 4-00

திருவாளர்கள்: கோவிந்தன், இரா. பட்டாபி, தார்வின், கிருட்டிணன், பழனி, ஆர். தியாகராசன் (தலைக்கு ஓர் உருபாமேனி) 6-00

தஞ்சை, அய்யம்பேட்டை, தீந்தமிழ்ப் படிப்பகம் சார்பில் வரப்பெற்ற தொகை:

திருவாளர்கள்: குப்பு; ஆத்மராமன், இராமு, வேங்கடராசன், கலியு. இராமலிங்கம், வெங்கு. இராமமூர்த்தி, அப்து. தாசுதீன், சாரு. பாலகிருட்டிணன், மாணு. சகந்நாதன், கிரு. நந்தகுமார், இல. அரசேந்திரன், சாரு. கோதண்டராமன், சீனு. இராமமூர்த்தி, கிரு. நாகராசன், திரு. துளசிராமன், கிரு. வேங்கடேசன், சா. கோயில்பிள்ளை (தலைக்கு ஓர் உருபாமேனி) 15-00

திருவாளர்கள்: பத்மு. இராமலிங்கம், வெங்கு. கோவிந்தராசு (தலைக்கு 0-50 காசு மேனி) 1-00

மொத்தம்:	358-00
முன் மொத்தம்:	579-85
தொகு மொத்தம்:	937-85

(தொடரும்)

நன்றி

பொங்கல் நன்னாளில் அன்போடும் கனிவோடும் அஞ்சல்வழியும் நேரிலும் வாழ்த்துகள் விடுத்த தமிழ் அன்பர்கள் யாவருக்கும் என நெஞ்சு நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

-பெருஞ்சித்திரன்.

தாங்கள் எழுதிய ஒவ்வோர் எழுத்தும் எனது நெஞ்சத்தை உருக்கிக் கண்களில் ஆறெனப் பெருகச் செய்தன. ஐயனே! தாங்களின் கொள்கைகள் வெற்றிபெற்றால்தான், உண்மைத் தமிழும், தமிழகமும் உருவாகும். அது நடக்குமா? தங்களின் எண்ணம் ஈடேறுமா? இவையே என் நெஞ்சத்திலும் பலகாலமாக எழுந்து வரும் கேள்விகள். 'தென்மொழி'யில் வெளிவரும் அன்பர்களின் அஞ்சல்களையும் அச்சகத்திற்கு அன்பளிப்புத் தருவோரின் பெயர்ப் பட்டியலையும் காணுகையில் ஓரளவு ஆறுதல் ஏற்பட்டாலும் பெரும்பாலான தமிழர்கள்; மொழியுணர்வோ, நாட்டுணர்வோ இல்லாதவர்களாய் வெறும் வயிற்றுப் பண்டாரங்களாயிருப்பதை நினைத்தால் நெஞ்சம் குன்றித்தான் போகின்றது. தங்களைப் போன்றோர் இன்னலுறுவதையும், வெற்று வேட்டுகள் 'வேண்டியன அடைவதையும் பார்க்கையில்' முகமது நபிகளாரின் "இவ்வுலகு உண்மையுள்ளோர்க்குச் சிறையாயும், போலிகளுக்குத் துறக்கமாயுமுள்ளது" என்ற பொன்மொழியே நினைவுக்கு வருகின்றது.

செ. கா. சா. காதர்முகைதீன், பீமாதெரு, செய்துங்கநல்லூர் (அஞ்)
நெல்லைமாவட்டம்.

O சென்ற திங்கள் எழுதிய ஆசிரியவுரை (இந்தி பற்றி) பொன்னேட்டில் பொறிக்கப் படவேண்டிய உரையாகும். உருசோவையும், மார்க்சையும் சாக்ரட்டீசையும் அவரவர் காலத்து மக்கள் எவ்வாறு புறக்கணித்தார்களோ அதே போன்று இற்றையத் தமிழ் மக்களும் அரசியல் புரட்டர்களும் அவர்தம் அடிதாங்கிகளும்' கட்சிப் போர்வையில் கட்டுண்டு கிடக்கும் கயவர்களும்' பார்ப்பனர் அடிவருடிகளும் புறக்கணிக்கலாம். அவற்றையெல்லாம் ஒருபொருட்டாய் மதியாது விடுதலைப் படையை உருவாக்க முயலுங்கள். இதையெல்லாம் உணராது தென்மொழியின்மேற் புன்மொழி வீசும் பொய்யர்களின் நாவைத் தங்களின் உடலில் உயிரில் கன்ன்று கொண்டிருக்கும் உரிமைத்தீ சுட்டெரிக்கும் என்பதை மட்டும் எண்ணி அமைவு கொண்டு ஏறு நடையிடுங்கள். "தென்மொழியை எத்தனை ஆண்டுகள் நடத்தினோம் எவ்வளவு பணம் சேர்த்தோம் என்பதைக் கணக்கெடுக்கும் வாணிக நோக்கம் எங்களுக்கில்லை, இருந்த வரையில் தமிழுக்கும் தமிழருக்கும் எவ்வெவ் வழியில் பயன்பட்டு விடுதலை உணர்வைக்கிண்டி விட்டது என்று எண்ணி ஏறுநடையிட்டலே எங்களின்குறி" என்பதை மீண்டும் மீண்டும் உணர்த்துங்கள். வாழ்க தமிழ்! பரவுக தென்மொழி!

ச. மதியழகன், கவின் இல்லம், விராலிமலை.

O அள்க்கலாகா அளவும் துலக்கலாக நிலையும் கொண்ட அன்னைத் தமிழை ஆற்றலுடன் காக்க, இன்னல்களைக் பொருட்படுத்தாது ஈரமுடன் உழைக்கும் ஊக்கமுடை என்னருமை ஆசிரியப் பெருந்தகையே! வணக்கம் 'மூத்தமிழைக் குறையூட்ட முக்கண்ணனுரையும் ஏற்கோம்' என்று முழக்கிய நக்கீரனாகத் திகழ்கிறீர்கள். தமிழுக்காகத் தகைமைசால் தமிழக முதல்வரையும் நேராக இடித்துரைத்தீர்! அடியேனின் பாராட்டுகள். திரைப்படச் சுழல் நீரோட்டத்தை நாடி ஏகும் தமிழ்ப்பண்பாட்டு நாவாயைத் திசைதிருப்பி நல்வழியிலேகத் தூண்டும் தங்களின் முயற்சிக்கு எளியேனின் வரவேற்புகள். என்னுடைய தமிழறிவை விளக்கமுறப் பெருகச் செய்யும் தென்மொழி என்றென்றும் வாழ்ந்து வளர்க.

அமரன்பதியோன் சோ. மு. மா. பழனியாண்டவர் கலைக்கல்லூரி,
பழனி.

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

துரை-மாணிக்கம்

எழுதிய

தேவைக்கு முந்துக!

தனிப்படி உருபா. 1—00

அஞ்சல்வழி வேண்டுவோர் உருபா. 1-25 விடுக்க.

விளக்கங்களுக்கு,

தென்மொழி

கடலூர்-௧.